Registered as a Newspaper
பக்கங்கள் 12 | விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 96

வெள்ளிக்கிழமை
01 மார்ச் 2024

மாசி 18 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



"கட்டுமரம் கடலுக்க போனபிறகும் உந்த உடன்பிறப்புகளுக்கு இன்னும் எங்களில வன்மம் தான் கண்டியளோ"



# 3 பேர் மிச்சமிருக்கிறோம்; எங்களையும் கைவிடாதீர்!

## சிறைக்குள் இருந்தவாறு பயஸ் உருக்கமான கடிதம்

**புதுடில்லி, மார்ச் 1**

**ராஜீவ்காந்தி கொலை வழக்கில் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டபோதிலும், சிறைவாழ்வைவிடவும் மோசமானதும் கொடுமையானதுமான வாழ்வையே தற்போது அனுபவித்து வருகின்றோம். சாவை எதிர்நோக்கியவாறே இன்று எம் வாழ்வு அமைந்திருக்கின்றது என்று சிறைக்குள் இருந்து கடிதம் எழுதியுள்ளார் றொபேர்ட் பயஸ்.**

11

# சாந்தனை அனுப்புவதற்கு பின்னடித்தது தி.மு.க.வே!

## ஜனவரி 22 மத்திய அரசு அனுமதி உயர்நீதிமன்றில் நேற்றுத் தெரிவிப்பு

புதுடில்லி, மார்ச் 1

சாந்தனை இலங்கைக்கு அனுப்புவதற்கு இந்திய மத்திய அரசு ஜனவரி மாதம் 22ஆம் திகதியே அனுமதி வழங்கிவிட்ட போதிலும், தமிழகத்தின் ஆளும் தி.மு.க. அரசு அவரை இலங்கைக்கு அனுப்பாதிருந்த விடயம் இந்திய உயர் நீதிமன்றத்தில் நேற்றுச் சுட்டிக்காட்டப்பட்டது.

சாந்தன் உயிரோடிருந்த போது, இலங்கையில் சுகவீனமடைந்துள்ள தனது தாயாரை கவனிப்பதற்காக இலங்கைக்குச்

11

# சாந்தனின் பூதவுடல் இன்று இலங்கைக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 1

சென்னை அரச மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் உயிரிழந்த சாந்தனின் உடல் இன்று வெள்ளிக்கிழமை இலங்கைக்குக் கொண்டுவருவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சாந்தனின் பூதவுடலினை இலங்கைக்குக் கொண்டு வருவதற்கு உரிய நடவடிக்கைகள் அவரது குடும்பத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

11

# ரயிலில் மோதுண்டு பெண் பலி

பக்.11

## யாப்புக்கு உட்பட்ட வகையில்

# தமிழரசின் தலைமைப்பதவி உட்பட சகல தெரிவுகளையும் மீளநடத்தத் தயார்

## நீதிமன்றத்தில் நேற்றுத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 1

தமிழரசுக் கட்சியின் தலைவர் தெரிவு உட்பட அனைத்துத் தெரிவுகளையும் யாப்பின் பிரகாரம் மீள நடத்துவதற்குத் தயார் என்று தமிழரசுக் கட்சியின் சார்பில் திருகோணமலை மாவட்ட நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் எம்.ஏ.சுமந்திரனின் நிலைப்பாட்டை அறிவதற்காக ஏப்ரல் 5ஆம் திகதி வரை வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

10

# 53,000 போதைமாத்திரைகள் மன்னாரில் மீட்பு!

மன்னார், மார்ச் 1

மன்னார், இலுப்பைக்கடவைப் பகுதியிலுள்ள தடாகத்துக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், 53 ஆயிரம் போதை மாத்திரைகள் நேற்றுக் கடற்படையால் மீட்கப்பட்டுள்ளன.

11

# தரிப்பிடச் சிக்கலைத் தீர்க்க தனிக்குழு அமைக்க முடிவு!

யாழ்ப்பாணம், மார்ச் 1

நெடுந்தூரப் பயணத்தில் ஈடுபடும் தனியார் பேருந்துச் சாரதிகள் மற்றும் நடத்துநர்களின் போராட்டத்தையடுத்து, தரிப்பிடச் சிக்கல்களைத் தீர்ப்பதற்காக தனிக்குழு அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேற்று மாலை இந்தப் பிரச்சினை தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்றது.

11

## தனியார் பஸ்காரர்களால்

# பேருந்து நிலையம் முற்றுகை; பயணிகள் கடும் அந்தரிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 1

தனியார் பேருந்துகளின் சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தை நேற்று முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்தினர். அவர்களின் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தால் பொதுப்போக்குவரத்தில் நேற்றுப் பெரும் நெருக்கடிகள் ஏற்பட்டன. பயணிகள் பலரும் இந்தத் திடீர் முற்றுகைப் போராட்டத்தால் பெரும் சிக்கல்களுக்கு முகங்கொடுத்தனர்.

நெடுந்தூரப் பேருந்துச் சேவைகளுக்கு முறையான பேருந்துத் தரிப்பிடம் இல்லாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்றுமுன்தினம் முதல் அனைத்து மாவட்

10

## நிகழ்நிலைக் காப்புச்சட்டத்துக்கு எதிரான

# சுமந்திரனின் மனு நேற்று நிராகரிப்பு

கொழும்பு, மார்ச் 1

நிகழ்நிலைக் காப்புச் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட விதம் சட்டத்துக்கு முரணானது எனத் தீர்ப்பளிக்குமாறு வலியுறுத்தி, ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் தாக்கல் செய்த மனுவை விசாரணை செய்யாமல் நிராகரிக்க உயர்நீதிமன்றம் நேற்றுத் தீர்மானித்தது.

பிரியந்த ஜயவர்த்தன, ஷிரான் குணரத்ன மற்றும் அச்சல வெங்கப்புலி ஆகிய மூவரடங்கிய உயர் நீதிமன்ற

11

# உத்திக கனடாவில் தஞ்சம்!

கொழும்பு, மார்ச் 1

நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்த உத்திக பிரேமரத்ன கனடாவில் அரசியல் தஞ்சம் கோரியுள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

தனக்கு உயிர் அச்சுறுத்தல் இருப்பதாகக்

10

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராட்டத்துக்குத் தயாராகும் வடமராட்சி கிழக்கு மீனவர்கள்!

**யாழ்ப்பாணம், மார்ச் 1**

**இந்திய மீனவர்களின் அத்துமீறல்களைக் கண்டித்து இலங்கைக் கடல் எல்லையில் கறுப்புக் கொடி ஏந்தி எதிர்ப்பைத் தெரிவிப்பதற்கு வடமராட்சி கிழக்கு மீனவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.**

இலங்கைக் கடல் பகுதிக்குள் அத்துமீறி மீனவர்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும் செயற்பாட்டை இந்திய இழுவைமடிப் படகுகள் தொடர்ச்சியாக மேற்கொண்டுவருகின்றன. இந்திய இழுவைமடிப் படகுகளை எதிர்த்து நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை கறுப்புக் கொடிப் போராட்டம் நடத்துவதற்கு வடமராட்சி கிழக்கு மீனவர்களுக்கு யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ஒ-27)

## திருவிழா

கோண்டாவில், மார்ச் 1

கோண்டாவில், ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய சோபகிருது வருட அலங்காரத் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. எதிர்வரும் 7 ஆம் திகதி இரவு 7 மணிக்குத் தீமிதிப்புத் திருவிழாவும், 9 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்கு தேர்த்திருவிழாவும், 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணிக்குத் தீர்த்தோற்சவமும் இடம்பெறுமென ஆலயப் பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (ப-66)

### அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், மார்ச் 1

அரியாலை கிழக்கு, ஸ்ரீ சிவ நாகதம்பிரான் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நேற்றுமுன்தினம் புதன் கிழமைஆரம்பமானது. (ப-66)

## மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 1

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, ஆரம்பப் பிரிவு மாணவர்களின் இல்ல மெய்வல்லுநர் போட்டி கல்லூரி மைதானத்தில் இன்று வெள்ளிக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு நடைபெறவுள்ளது.

கல்லூரி முதல்வர் வ. நந்தீஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் பிரதம அதிதியாக ஓய்வுபெற்ற முன்னாள் பிரதி அதிபர் திருமதி என். நந்தினி பங்கேற்கவுள்ளார். (ப-63)

## எச்.ஐ.வி.நோயாளர் நாட்டில் அதிகரிப்பு!



கொழும்பு, மார்ச் 1

புதிதாக எச்.ஐ.வி.யால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 14 சதவீதம் அதிகரித்துள்ளது என்று தேசிய பாலியல் நோய் மற்றும் எய்ட்ஸ் தடுப்புத் திட்டம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் அதன் பணிப்பாளர்சமூக மருத்துவநிபுணர் ஜானகி விதானபத்திரன தெரிவிக்கையில், 2022ஆம் ஆண்டைவிட 2023 ஆம் ஆண்டில் புதிய எச்.ஐ.வி. தொற்றாளர்களின் எண்ணிக்கை 14.3 சதவீதம் அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டு, 694 புதிய எச்.ஐ.வி. நோயாளிகள் கண்டறியப்பட்டனர். புதிதாகத் தொற்றுக் குள்ளானவர்களாக 611 ஆண்களும் 81 பெண் களும் இனம் காணப்பட்டுள்ளனர்.

அதன்படி, சமூகத்தில் எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை சுமார் 4,100 என மதிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, ஒருவருக்கு எச்.ஐ.வி. தொற்றுஏற்பட்டால், அதன் அறிகுறிகள் வெளிப்படுத்த சுமார் எட்டு வருடங்கள் ஆகும். எனவே, எச்.ஐ.வி. அறிகுறிகளுக்கு நிகரான அவதானங்கள் தென்பட்டால், எச்.ஐ.வி. பரிசோதனை செய்வது அவசியம் - என்றார். (ச-இ)

## பதவியிலிருக்கும்போது செய்யாதவர் பதவியைத் துறந்து என்ன செய்வார்?

*டக்ளஸை சாடும் மீனவர் சங்கத் தலைவர்*

யாழ்ப்பாணம், மார்ச் 1

பதவியில் இருக்கும்போது எதுவும் செய்ய முடியாத கடற்றொழில் அமைச்சர் பதவி விலகி என்ன செய்யப்போகிறார்? என வடமராட்சி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் உபதலைவர் நாகராசா வர்ண குலசிங்கம் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் கைதுசெய்யப்பட்டுள்ள இந்திய மீனவர்களை விடுவிக்குமாறு இந்தியாவால் தொடர்ந்து அழுத்தம் வழங்கப்படுமாகவிருந்தால், தான் பதவியைத் துறந்து மக்களுடன் மக்களாகக் கடலில் இறங்கிப் போராடுவேன் எனக் கடற்றொழில் அமைச்சர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கூறியிருப்பது உண்மையிலேயே குழந்தைத்தனமானதொரு கருத்து. உரிய அதிகாரம் அவரது கையிலே இருக்கிறது.

இந்திய மீனவர்களின் படகுகளைப் பிடிக்குமாறு கடற்படைக்கு அறிவித்து நடவடிக்கை எடுக்கமுடியும். ஆனால் அவரால் முடியவில்லை - என்றும் அவர் குறிப்பிட்டார். (ஒ-66)

## நன்னீர் மீன்பிடிப் பிரச்சினை ஆராய்வு

முல்லைத்தீவு, மார்ச் 1

முல்லைத்தீவு மாவட்டத்தில் நன்னீர் மீன்பிடியை முன்னெடுப்பதிலுள்ள பிரச்சினைகள் தொடர்பில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆராய்ந்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துக்கு நேற்று முன்தினம் சென்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மாவட்ட சிறுதொழில் மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள், நன்னீர் மீன்பிடியாளர்கள், கரையோர ஆழ்கடல் மீனவர்கள் முதலானோர் மற்றும் திருமுறிகண்டி ஆலய அபிவிருத்தி தொடர்பிலும் மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்தார்.

சிறுதொழில் மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் மூலதனப்பிரச்சினை உண்டு என்பதை அமைச்சரிடம் எடுத்துரைத்தனர். இதற்குப் பதிலளித்த அமைச்சர் மிக விரைவில் உரியவர்களுடன் பேசி ஏற்பாடுகளைச் செய்துதருவதாகத் தெரிவித்தார். மேலும் நன்னீர் மீனவர்களின் பிரச்சினையாகக் காணப்படும் தண்ணிமுறிப்புக்குளத்தின் மீன்பிடி தொடர்பில் எடுத்துக்கூறப்பட்டது. இதற்கு தீர்வு காண்பதற்காக துறைசார்ந்த திணைக்களங்களின் பங்களிப்புடன் தீர்வை வழங்குவதாக அமைச்சர் குறிப்பிட்டார். (ஒ-35)

## சந்தை இடமாற்றம்; வியாபாரிகள் விசனம்

யாழ்ப்பாணம், மார்ச் 1

கொக்குவில் பொதுச் சந்தை புதிய இடத்துக்கு நல்லூர்ப் பிரதேசசபையால் மாற்றப்பட்டுள்ளது. அது தொடர்பில் வியாபாரிகளும், மக்களும் விசனம் வெளியிட்டுள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை முதல் மாற்றப்பட்டுள்ள கட்டடத்தில் உரிய வசதிகள் காணப்படவில்லை எனவும் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

இறைச்சிக் கடைகளுக்கு அருகில் மரக்கறிகளை விற்பனை செய்யவேண்டியுள்ளமையால் இறைச்சியின் மணம் மரக்கறிகள் வாங்க வரும் மக்களை முகம் சுழிக்க வைக்கின்றது என்றும் வியாபாரிகள் தெரிவித்தனர்.

தம்மை மீண்டும் பழைய இடத்திலேயே வியாபாரத்தில் ஈடுபட நல்லூர்ப் பிரதேசசபையின் செயலர் துரிதமாக நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-66)

## மதரீதியான நடவடிக்கை; கடற்படைக்கு அதிகாரமில்லை

*அங்கஜன் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், மார்ச் 1

சிறிலங்கா கடற்படையினர் தேசியப் பாதுகாப்புத் தொடர்பான விவகாரங்களைக் கையாளலாம். மதரீதியான விடயங்களில் அதிகாரம் செலுத்தமுடியாது -இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

மாதகல் சம்பில்துறை விகாரைக்கு இடைஞ்சலாக இருப்பதாகத் தெரிவித்து மீன்பிடி நடவடிக்கைக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

"கடற்படையினர் தேசியப் பாதுகாப்பை நிலைநிறுத்தலாம். ஆனால் மதரீதியான விடயங்களை முன்வைத்து அதிகாரம் செய்வதற்கு அவர்கள் செயற்படமுடியாது. மாதகல் பிரச்சினை தொடர்பில் உரிய தரப்புகளுடன் பேசுவேன்" - என்றார். (ஒ-125)

## உறுதிமொழிக்கு உயிர் கொடுப்போம்




'நான் ஒருதடவை முடிவெடுத்தால் என் பேச்சையே நான் கேட்கமாட்டேன்' என்று சினிமாப் பாணியில் 'பஞ்ச்' வசனம் பேசுவது எளிதாகும். ஆனால் எடுத்த முடிவை பின்வாங்காமல் செயற்படுத்தும் பொழுதுதான் சாக்குப்போக்குகளைத் தொடங்கிறோம்.

நிறைய கனவுகளைச் சுமந்தவர்களாக "இன்பத்திலும் துன்பத்திலும் உடல்நலத்திலும் நோயிலும் நான் உனக்குப் பிரமாணிக்கமாய் இருந்து என் வாழ்நாளெல்லாம் உன்னை நேசிக்கவும் மதிக்கவும் வாக்களிக்கிறேன்" என்று திருமணத்தின்போது இறைசந்நிதியில் வாக்குறுதி அளித்து குடும்ப வாழ்வைத் தொடங்குகிறோம்.

ஆனால் பிரச்சினைகள், குடும்பச்சுமைகள் வரும்போது அவற்றைச் சமாளிக்கத் துணிவில்லாது மனவிலக்குப் போன்றவற்றில் இறங்கி திருமண வாக்குறுதிகளை முறித்துக் கொள்கின்றோம்.

இதுவே இன்றைய குடும்பக் கட்டமைப்புகள் நலிவுற்றுப் போவதற்குக் காரணமாக அமைகின்றன. எதுவந்தபோதும் வாக்குறுதிகளை பிரமாணிக்கத்துடன் பின்பற்றி இறையாட்சியை எம்மில் உயிர்த்தெழச்செய்ய உறுதிமொழி எடுப்போம். இயேசுவோடு இணைந்த வாழ்வால் நற்செய்தியை அறிவிப்போம்.

யே.சுபீட்சன்,
கொழும்புத்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் தடையால் கடும் அதிருப்தியில் சீனா

கொழும்பு, மார்ச் 1

**ஆராய்ச்சிக் கப்பல்களுக்கு இலங்கை தடைவிதித்துள்ளமைக்கு சீனா தனது கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளது.**

கடந்த ஜனவரி 3ஆம் திகதி முதல் சீன ஆராய்ச்சிக் கப்பல்கள் இலங்கையின் விசேட பொருளாதார வலயத்தில் ஆராய்ச்சியில் ஈடுபடுவதற்கு தடைவிதித்துள்ளமை தொடர்பாகவே சீனா தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

வெளிநாட்டு ஆராய்ச்சிக்கப்பல்கள் இவ்வாறான ஆராய்ச்சிகளில் ஈடுபடுவதற்கு இலங்கை ஒருவருடகால தடை விதித்துள்ளது. சீனாவின் ஜியாங் யாங் கொங்- 3 என்ற ஆராய்ச்சி கப்பல் தென் இந்தியக் கடற்பரப்பில் ஆராய்ச்சியில் ஈடுபடுவதற்கு திட்டமிட்டிருந்த நிலையிலேயே இலங்கையால் இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

தனது அயலில் ஆராய்ச்சிகள் இடம்பெறுவது தொடர்பான பாதுகாப்புக்கரிசனையை இந்தியா வெளியிட்ட பின்னணியிலேயே இலங்கையின் தடை அறிவிப்பும் வெளியாகியிருந்தது.

சீனா இலங்கையின் இந்த முடிவால் கடும் அதிருப்தியடைந்துள்ளது என்று இராஜதந்திரத் தகவல்கள் கூறுகின்றன. இன்னுமொரு நாட்டின் அழுத்தத்தால் இலங்கை இவ்வாறான முடிவை எடுத்துள்ளமை சீனாவைக் கடும் அதிருப்திக்கு உள்ளாக்கியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

## மத்தியவங்கி தன்னிச்சை!

கம்மன்பில குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 1

இலங்கை மத்தியவங்கி நூல் அறுந்த பட்டம் போன்றுசெயற்படுகின்றது என்று பிவித்துரு ஹெல உறுமயக் கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

நாட்டின் ஏனைய துறைகளில் சம்பள அதிகரிப்பு மேற்கொள்ளப்படும் போது நிதியமைச்சரின் அனுமதி பெறப்படுகிறது. மத்தியவங்கியின் பணியாளர்களது சம்பளங்களும் நிதி அமைச்சரின் அனுமதியுடனேயே வழங்கப்படவேண்டும்.

ஆனால் மத்தியவங்கி அரசின் பிடியிலிருந்து விலகியதனால் இவ்வளவுபெரும்தொகைசம்பள அதிகரிப்பைமேற்கொள்ள முடிந்துள்ளது. இது குறித்து நாடாளுமன்றில் கேள்வி எழுப்பத் திட்டமிட்டுள்ளேன் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-இ)



## மே மாதம் வரை வெப்பம் வாட்டும்

கொழும்பு, மார்ச் 1

நாட்டில் தற்போது நிலவும் வெப்பமான காலநிலை எதிர்வரும் மே மாதம் வரையில் தொடரும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

அதேவேளை, அதிக வெப்ப நிலை நிலவும் சந்தர்ப்பங்களில் பாடசாலைகளில் வெளிப்புற நடவடிக்கைகளில் மாணவர்களை ஈடுபடுத்தவேண்டாம் என்று கல்வி அமைச்சு அறிவுறுத்தியுள்ளது. (எ-இ)

## கடல்சார் பாதுகாப்பில் இந்தியக் கப்பல்கள்

கொழும்பு, மார்ச் 1

இந்தியாவின் இரண்டு கரையோரப் பாதுகாப்புக் கப்பல்கள் காலி மற்றும் கொழும்புத் துறைமுகங்களுக்கு வந்துள்ளன.

இவை இன்று வெள்ளிக்கிழமை வரை காலியில் தரித்திருக்கவுள்ளன என இலங்கைக் கடற்படை தெரிவித்துள்ளது. இந்தக் கப்பல்கள் நாட்டில் தங்கியிருக்கும் காலப்பகுதியில் தீயணைப்பு, சேதங்களைக் கட்டுப்படுத்துதல், சமுத்திரப் பாதுகாப்பு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பான பயிற்சிகளை வழங்குதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடவுள்ளன. (ச-இ)

## 2ஆம் கட்ட 'அஸ்வெசும': சரிபார்ப்பு நிறைவு

### தகுதியற்ற 7000 பேர் நீக்கம்

'அஸ்வெசும' இரண்டாம் கட்டத்துக்காக விண்ணப்பித்த பயனாளிகளின் தரவு சரிபார்ப்பு மற்றும் சான்றுபடுத்தல் பணிகள் நிறைவடைந்துள்ளன என்று நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

'அஸ்வெசும' இரண்டாம் கட்ட விண்ணப்பம் கோரல் 2024 மார்ச் 15 ஆம் திகதியுடன் நிறைவடையும்.

விண்ணப்பங்களை சமர்ப்பிக்காதவர்கள் 'அஸ்வெசும' பலனைப் பெறத் தகுதி அற்றவர்கள். பொய்யான தகவல்களின் மூலம் 'அஸ்வெசும' நன்மைகளைப் பெற முயற்சித்த சுமார் 7000 பேர் நீக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார். (ச-26)

## சாந்தனுக்கு நேர்ந்த அவலம் ஏனைய மூவருக்கும் நேரக்கூடாது

### பழ.நெடுமாறன் கோரிக்கை

சாந்தனுக்கு நேர்ந்த கதி மற்ற மூவருக்கும் நேர்ந்துவிடக் கூடாது. எனவே, சிறப்பு முகாமில் இருக்கும் ஏனைய மூவரையும் உடனடியாக இந்திய அரசு விடுதலை செய்யவேண்டும்.

-இவ்வாறு சாந்தனின் மறைவு தொடர்பில் தனது இரங்கல் அறிக்கையில் உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ.நெடுமாறன் சுட்டிக்காட்டியுள்ளார். உடல்நலம் குன்றியிருந்த சாந்தனை உடனடியாக விடுதலை செய்யுமாறு விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு இந்திய அரசு செவிசாய்க்க மறுத்துவிட்டது. உச்சநீதிமன்றம் ஆணையிட்டபடி உடனே விடுதலை செய்திருந்தால், அவர் தனது குடும்பத்தினருடன் இணைந்திருப்பார். அவர்களின் அன்பான பராமரிப்பில் உயிர் பிழைத்திருக்கக் கூடும்.


சாந்தன் உயிர்துறந்த செய்தி அனைவரையும் மீளாத் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. சிறையில் வேதனைகளுக்கு ஆளாகி மறைந்து போன சாந்தனுக்கு எனது அஞ்சலிகள் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## புதினம் தெரியுமோ?

**வீட்டுக்கட்சி இப்ப கோர்ட்டுக் கட்சியா மாறிப்போட்டுது. நேற்று மட்டும் ஒரேநாளில மூண்டு வழக்குகள். ரண்டு வழக்கு யாழ்ப்பாணத்தில, ஒரு வழக்கு திருகோணமலையில. இதில யாழ்ப்பாணத்தில முதல்ல பீற்றர் இளஞ்செழியன் போட்ட வழக்கு மட்டும் தான் இருந்தது. ஆனால் போன செவ்வாய்க்கிழமை மின்னாமல் முழங்காமல் முல்லைத்தீவில இருந்து வந்த இன்னொரு ஆளும் வழக்குப் போட்டிருக்கிறார். ஆக, ஒரே நாளில மூண்டு வழக்குக்கும் போக வேண்டியநிலைமை வீட்டுக் கட்சிக்கு.**

**வழக்கொண்டு வந்தால், அதைக் கூட ஒரு கன்னையா நிண்டு எதிர்கொள்ளுற அளவுக்கு வீட்டுக் கட்சிக்குள்ள ஒற்றுமைகிடையாது. இந்த வழக்குகளில கூட, எதிராளியாப் பேர் போடுப்பட்ட கட்சி ஆக்கள், தங்களுக்குள்ளையே ரண்டு கன்னையாப் பிரிஞ்சு நிக்கினம் போல. திருகோணமலை வழக்கு நேற்று நடக்கேக்க ஒரு தரப்பு, 'யாப்பை மீறித்தான் சில காரியங்கள் நடந்திருக்கு.அதால மூலக்கிளையில இருந்து எல்லாத் தெரிவையும் முதல்ல இருந்து வைக்க வேணும். அதுக்கு கோர்ட் மேற்பார்வை செய்யவேணும் ' எண்டு சொல்லியிருக்குது. அப்பிடி பிழையெண்டதை ஒத்துக்கொண்டால், வழக்கும் கெதியா முடியும். கட்சியும் யாப்புப்படி சரியா இனிமேல் நடக்க முடியும். ஆனால் வழக்குப் போட்டவைக்கு உந்த முடிவு சரிவராதே. அந்தநேரம், மற்றத்தரப்பு நசுக்கிடாமல், அங்க வந்திருந்த லோயர் சயந்தன் மூலமா, வழக்காளி தரப்பு லோயருக்கு ஒரு கள்ளச்சீட்டு எழுதிக் குடுத்திருக்கினம். அதில 'ஆட்சேபனை தெரிவிக்க அவகாசம் வேணும்' எண்டு இருந்திருக்கு. அப்பிடி லோயர் சயந்தன் மூலமா அவகாசம் கேட்டவயை ஆரெண்டு நினைக்கிறியள், டாக்குத்தர் சத்தியலிங்கமும், நிர்வாகச் செயலாளர் குலநாயகமும் தான். பிறகு அவை ரண்டு பேரும் நேரில கோர்ட்டுக்கு வந்ததால, அவையின்ர அபிப்பிராயத்தை உடனேயே கேக்கச் சொல்லி மற்றப்பக்க லோயர்மார் விடாப்பிடியா நிண்டிருக்கினம். பிறகு சத்தியலிங்கத்தாரும், குலநாயகத்தாரும் வேண்டாவெறுப்பா 'அவகாசம் தேவையில்லை, மற்ற நாலுபேரும் சொன்ன முடிவுக்கே நாங்களும் வாறம்' எண்டவையாம். அவையள் அவகாசம் வாங்க வெளிக்கிட்டதும், ஆட்சேபனை தெரிவிக்க நினைச்சதும் வழக்கை முடிக்க விடாமல் இழுத்தடிக்கத்தான். இப்பிடி எதிராளி தரப்பே தாங்களுக்குள்ள குத்துப்பட வேணும் எண்டுதான் அவையளையும் வழக்குப் போட்டவை எதிராளியாப் போட்டிருக்கினம்.**

**உண்மையில கட்சி நல்லா இருக்க வேணும், யாப்பின் படி கட்சி நடக்கவேணும் எண்டு நினைச்சிருந்தால், நேற்றே திருகோணமலை வழக்கை முடிச்சிருக்கலாம். ஆனால் வழக்குப் போட்டவைக்கும், அப்பிடி வழக்கைப் போட வைச்சவைக்கும் நோக்கமே வேற. வீட்டுக்கட்சியை சின்னாபின்னமாக்கிறதும், எலக்சன் காலத்தில தமிழ்ச்சனங்களுக்கு உருப்படியா ஒரு கட்சியை இல்லாமல் செய்யிறதும் தான் அவையின்ர பிளான். அதுக்குத்தான் 'பிழை நடந்துதான் போச்சு, தலைவர் தெரிவில இருந்து எல்லாத்தையும் கான்சல் பண்ணிப்போட்டு, மூலக்கிளையில இருந்து புதிசா எல்லாரையும் தெரிவு செய்வம்' எண்டு எதிராளி தரப்பில பெரும்பாலான ஆக்கள் இணங்கியும் கூட, மிச்ச மூண்டுபேரை வைச்சு ஆட்சேபனை தெரிவிச்சு, வழக்கை வேணுமெண்டே இழுத்தடிச்சு, கட்சியின்ர கண்ணைக் குத்திற விளையாட்டு நடக்கப்போகுது. இதில ஆகப்பெரும் பகிடி என்னெண்டால், ஆரெல்லாம் இந்த வழக்குக்கு ஆட்சேபனை தெரிவிக்கினமோ, அவையள் தங்களுக்கு எதிரா தாங்களே வழக்குப் பேசப்போயினம் எண்டது தான். விளங்கினவன் பிஸ்தா!**



-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோதமான முறையில் இஸ்ரேலின் குடியிருப்புகள்



நியூயோர்க், மார்ச் 1
ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டுள்ள மேற்குக் கரையில் இஸ்ரேலால் மேற்கொள்ளப்படவுள்ள புதிய குடியிருப்பு சர்வதேச சட்டத்துக்கு முரணானது என ஜனாதிபதி ஜோ பைடனின் அரசாங்கம் அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேல் அரசு ஆக்கிரமிப்புச் செய்த பகுதியில் சுமார் ஆயிரம் வீடுகளை அமைத்து புதிய குடியிருப்புகளை ஏற்படுத்த முற்பட்டுள்ளது.

இதுதொடர்பில் ஆர்ஜென்ரினா தலைநகரில் ஊடகவியலாளர்கள் அமெரிக்க இராஜாங்க செயலாளர் அன்ரனி பிலிங்டனிடம் வினவிய போது, வொஷிங்டன் இது தொடர்பில் அவதானிப்புகளைச் செலுத்திவருவதாக நழுவல் போக்கில் பதிலளித்திருந்தார். (ஏ-இ)

## பஸ் விபத்து 14 பேர் சாவு

புதுடில்லி, மார்ச் 1
இந்தியாவின் மத்திய பிரதேச மாநிலம் தின்டோரி மாவட்டத்தில் கிராம மக்களை ஏற்றிச் சென்ற பஸ், சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானதில் 14 பேர் உயிரிழந்துள்ளனர். 24 பேர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஏ-இ)

## பணிக்கு வராவிட்டால் மருத்துவ உரிமம் இரத்து

### தென்கொரியா அதிரடி

சியோல், மார்ச் 1
தென்கொரியாவில் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ள ஆயிரக்கணக்கான இளம் மருத்துவர்கள் பணிக்குச் சமுகமளிக்காவிட்டால் அவர்களின் மருத்துவ உரிமம் இரத்துச் செய்யப்படும் என்று தென்கொரியா அரசு எச்சரித்துள்ளது.
பணிப்புறக்கணிப்பால் அந்த நாட்டின் மருத்துவமனைகளில் சத்திரசிகிச்சைகள் பாதிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஏ-இ)



## புவியியல் ரீதியாக இந்தியா பிரிக்கப்படுவதற்கு வாய்ப்பு

லண்டன், மார்ச் 1
இமயமலை மலைத்தொடருக்கு கீழேயுள்ள இந்திய மற்றும் யூரேசிய கண்டத்தின் டெக்டோனிக் தகடுகளின் மோதலால் இமயமலை உயரும் என்று விஞ்ஞானிகள் சில காலமாகக் கூறிவரும் நிலையில், இந்தியத் தட்டின் அடர்த்தியான கீழ்ப் பகுதிக்கும் மேல் பகுதிக்கும் இடையில் ஒரு செங்குத்தான விரிசலை விஞ்ஞானிகள் அடையாளம் கண்டுள்ளனர்.
இந்த இயற்கைச் செயன்முறையானது இந்தியாவை புவியியல் ரீதியாகப் பிரிக்கும் வாய்ப்புள்ளது என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.
நிலஅதிர்வு அலைகள் மற்றும் ஹீலியம் வாயு மேற்பரப்பில் கசிவது இந்த அடுக்கு பிரிதல் செயல் முறைக்குக் காரணமாகும் என விஞ்ஞானிகள் கூறுகின்றனர். (ஏ-இ)

## ஜப்பானில் 2023இலும் பிறப்புவீதம் வீழ்ச்சி!



டோக்கியோ, மார்ச் 1
ஜப்பானில் தொடர்ந்து எட்டாவது ஆண்டாகப் பிறப்பு வீதம் வீழ்ச்சியடைந்துள்ளது.
ஜப்பானில் கடந்த பல ஆண்டுகளாக பிறப்பு வீதம் குறைந்து வருகின்றது. இதன் தொடர்ச்சியாகவே கடந்த வருடமும் பிறப்பு வீதம் குறைவடைந்துள்ளது. இதன்படி 2022ஆம் ஆண்டைக் காட்டிலும் 2023ஆம் ஆண்டில் 5.1வீதமாக பிறப்பு வீதம் குறைவடைந்துள்ளது. இதன்படி 2022ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 7 இலட்சத்து 58 ஆயிரத்து 631 பிறப்புகள் கடந்த வருடம் ஜப்பானில் குறைவடைந்துள்ளன. ஜப்பானில் கடந்த சில வருடங்களாகத் திருமணங் களின் எண்ணிக்கையும் குறைந்து வருகின்றது. கடந்த 90 வருடங்களில் இல்லாத அளவுக்கு கடந்த வருடம் திருமணங்கள் குறைவடைந்துள்ளன என்றும் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. (ம)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளைத் தவிர்த்துவிடவும். வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். உறவினர்கள் அல்லது நண்பர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத செலவுகள் ஏற்படும்.

**இடபம்:** மனதில் அவ்வப்போது குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். தந்தைவழி உறவினர்களால் காரிய அனுகூலம் உண்டாகும். தாயிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதர வகையில் சிறுசிறு சங்கடங்கள், வீண் செலவுகள் ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உறவினர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். குடும்பத்துடன் தெய்வ வழிபாடு மேற்கொள்வீர்.

**கடகம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். மனவருத்தங்கள் நீங்கும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும்.

**சிம்மம்:** எதிர்பார்த்த காரியம் சாதகமாக முடியும். சங்கடங்கள் நீங்கும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. வாழ்க்கைத்துணையுடன் அனுசரித்துச் செல்லவும். மனதில் மகிழ்ச்சி அதிகரிக்கும். அதிக நன்மைகளைப் பெறலாம்.

**கன்னி:** புதிய முயற்சிகளை காலையிலேயே மேற்கொள்வது நல்லது. தந்தை வழி உறவினர்களிடம் உதவி கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத பண வரவுக்கு வாய்ப்பு உள்ளது. இலாபம் உண்டாகும்.

**துலாம்:** மனதில் தெய்வபக்தி அதிகரிக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்க நேரிடும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**தனுசு:** புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. சிலருக்கு எதிர்பாராத பணவரவுடன் திடீர்ச் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. மனதுக்கு மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். சகோதரர்களை அனுசரித்துச் செல்லவும்.

**மகரம்:** பணப்புழக்கம் அதிகரிக்கும். எதிர்பார்த்த காரியம் இழுபறியானாலும் முடிந்துவிடும். எதிர்பார்த்த நல்ல தகவல் உங்களுக்குக் கிடைப்பதால் மகிழ்ச்சி அடைவீர்கள். உறவுகள் ஆதரவாக இருப்பார்கள்.

**கும்பம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். சிலருக்குக் குடும்ப விடயமாக சற்று அலைச்சலும் செலவுகளும் ஏற்படும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**மீனம்:** எதிலும் அவசரம் வேண்டாம். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. வீண் அலைச்சலைத் தவிர்க்கவும். குடும்ப உறுப்பினர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. எதிர்பாராத செலவுகள் ஏற்படும்.

## பல லட்சம் ஏக்கர்களை ஏப்பமிடும் காட்டுத் தீ!

நியூயோர்க், மார்ச் 1
அமெரிக்காவில் உள்ள டெக்சாஸ் மாகாணத்தில் ஏற்பட்ட காட்டுத்தீ காரணமாக இலட்சக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் பசுமையான மரங்கள் எரிந்து சாம்பராகியுள்ளன.
காட்டுத்தீ காரணமாக அருகிலுள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களை உடனடியாகப் பாதுகாப்பான இடங்களுக்கு அரசு வெளியேற்றி வருகிறது. ஏற்கனவே 2 இலட்சம் ஏக்கர் வனப்பகுதி காட்டுத்தீ காரணமாக எரிந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஏ-இ)

# முடக்கப்பட்ட ரஷ்யச் சொத்து

### அமெ., பிரான்ஸ் மாறுபட்ட கருத்து

நியூயோர்க், மார்ச் 1
ரஷ்யாவின் சொத்துத் தொடர்பில் அமெரிக்க நிதிச் செயலாளர் வெளியிட்ட கருத்தை, பிரான்ஸ் நிதியமைச்சர் ப்ருநோ லி மையர் சவாலுக்குள்ளாக்கியுள்ளார்.
ரஷ்யா, உக்ரைன் மீது மேற்கொண்ட அத்துமீறிய ஆயுதத் தாக்குதல் காரணமாக அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகள் ரஷ்யாவுக்கு எதிராகப் பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளன. அதையடுத்து ரஷ்யாவுக்குச் சொந்தமான பல பில்லியன் டொலர் பெறுமதியான சொத்துகள் வெளிநாடுகளில் முடக்கப்பட்டுள்ளன. அவ்வாறு முடங்கிய சொத்துகளை 300 பில்லியன் டொலராக சட்டரீதியாக மாற்ற முடியும் என அமெரிக்க நிதிச் செயலாளர் ஜெனெட் ஜிலேன் அண்மையில் கருத்து வெளியிட்டிருந்தார்.
இந்த நிலையில் ஜி-7 அமைப்பின் நிதியமைச்சர்களின் மாநாட்டின் பின்னர் கருத்து வெளியிட்ட பிரான்ஸ் நிதியமைச்சர்,
அவ்வாறு ரஷ்யாவின் சொத்துகளை சட்டரீதியாக பணமாக மாற்றுவதற்கு ஏற்புடைய சர்வதேச சட்டம் இல்லை. அதற்காக மேலும் வேலை செய்யவேண்டும். இந்த நடவடிக்கை உறுப்பு நாடுகளுக்கிடையே பிளவை ஏற்படுத்தும் என்று தெரிவித்துள்ளார். (ஏ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


# பதவி துறப்பதே மதிப்பு

இலங்கை நாடாளுமன்றத்தின் சபாநாயகர் மஹிந்த யாப்பாவுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வரவுள்ளதாக அறிவித்துள்ளன. அதற்காக கையெழுத்துப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகளையும் அவை தீவிரப்படுத்தியுள்ளன. நாடாளுமன்றத்தில் தற்போதுள்ள நிலைமையின் பிரகாரம் எதிர்க்கட்சிகளால் சமர்ப்பிக்கப்படும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் வெற்றி பெறுவதற்கானவாய்ப்புகள் குறைவு. ஆனாலும் இந்தத் தீர்மானம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவது கூட ஒரு வகையில் வெற்றிதான்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா சிறிலங்கா பொதுஜன பெரமுன சார்பில் மாத்தறை மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர். அவர் சபாநாயகராக நியமிக்கப்பட்ட பின்னர் தனது கட்சி சார்புப்போக்கை கைவிட்டிருக்கவேண்டும். நாடாளுமன்றத்தில் அனைத்துக் கட்சிகளாலும் மதிக்கப்படும்-ஏற்றுக்கொள்ளப்படும் ஒருவராகத் தன்னை மாற்றியிருக்கவேண்டும். ஆனால் ஆரம்பம் முதலே, சபாநாயகரின் நடவடிக்கைகள் தொடர்பில் எதிர்க்கட்சிகள் தொடர்ச்சியாக விமர்சனம் செய்து வந்தன. சபாநாயகரின் நடவடிக்கைகள் பக்கச்சார்பானவை என்று அவை முரசறைந்தன. ஆனால் அவை எவற்றையும் துளியும் கவனத்தில் எடுக்கவில்லை சபாநாயகர் மஹிந்த யாப்பா. ஜனாதிபதிக் கதிரையில் இருப்பவர்களை திருப்திப்படுத்தும் வகையிலேயே அவர் தொடர்ந்து இயங்கிக்கொண்டிருந்தார். இந்த நிலையில்தான் நிகழ்நிலைக் காப்புச் சட்டம் தொடர்பான சர்ச்சையில் சபாநாயகர் சிக்கினார். இலங்கை வரலாற்றில் நிகழ்நிலைக் காப்புச் சட்ட வரைவுக்கு எதிராகவே உயர் நீதிமன்றத்தில் அதிகளவான வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. அதில் பல திருத்தங்கள் மேற்கொள்ளப்படவேண்டும் என்று உயர்நீதிமன்றம் பரிந்துரைத்திருந்தது. ஆனால் இவை எல்லாவற்றையும் மீறியே சட்டவரைவு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டமையால் அதைச் சான்றளிக்கக் கூடாது என எதிர்க்கட்சிகள் சபாநாயகர் மஹிந்த யாப்பாவிடம் கோரின. ஆனால் அவரோ, வழமை போன்று தனது விசுவாசத்தைக் காட்ட அதைச் சான்றளித்தார். அத்துடன் உயர் நீதிமன்றத்தின் வழிகாட்டல்களைப் பின்பற்றித் தான் சட்டம் நிறைவேற்றப்பட்டது என்றும் குறிப்பிட்டார். ஆனால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவோ, உயர் நீதிமன்றத்தின் வழிகாட்டல்கள் பின்பற்றப்படவில்லை என்று விலாவாரியாக நுணுக்கமாக ஆராய்ந்து அறிக்கையிட்டது. போதாக்குறைக்கு நிகழ்நிலைக் காப்புச் சட்டவரைவில் திருத்தங்களை மேற்கொள்வதற்கும் அமைச்சரவை ஒரு குழுவை நியமித்திருக்கின்றது. இந்தச் சீத்துவத்தில்தான் அந்தச் சட்டவரைவு நிறைவேற்றப்பட்டது என்பதை முன்னிலைப்படுத்தி எதிர்க்கட்சிகள் சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைக்கத் தயாராகின.

தவறுக்கு மேல் தவறாக சபாநாயகர் மஹிந்த மற்றொரு மிகப்பெரிய தவறையும் இழைத்திருக்கின்றார். இப்போதைய பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் விடயத்தில் ஜனாதிபதியின் பரிந்துரையை அரசமைப்புப் பேரவையில் பிரதமர் உட்பட 4 பேர் ஆதரித்துள்ளனர். அரசமைப்புப் பேரவையில் தீர்மானம் எட்டுவதற்கு 5 பேர் அதை ஆதரிக்க வேண்டும். எதிர்க் கட்சித் தலைவரும் அவரது கட்சியைச் சேர்ந்த கபீர் ஹாசிமும் இதை எதிர்க்க மற்றைய இருவரும் புறக்கணித்திருந்தனர். அவ்வாறு புறக்கணித்தவர்களின் வாக்கை , ஆதரவு என்றோ எதிர்ப்பு என்றோ சபாநாயகர் கருதக்கூடாது. ஆனால் வாக்களிப்பைப் புறக்கணித்தவர்கள் ஜனாதிபதியின் பரிந்துரைக்கு எதிர்ப்பையே வெளியிட்டனர் என்று விளக்கமளித்த சபாநாயகர், தீர்மானத்துக்கு 4 பேர் ஆதரவு 4 பேர் எதிர்ப்பு என்று கூறியிருக்கிறார். இதற்குப் பின்னால் பெரும் தந்திரம் ஒன்றுண்டு. அதாவது அரசமைப்புப் பேரவையில் தீர்மானம் ஒன்றுக்கு ஆதரவும் எதிர்ப்பும் சமமாக இருந்தால் மாத்திரமே சபாநாயகரது வாக்கைப் பயன்படுத்தி முடிவெடுக்கமுடியும். அதன் காரணமாகவே இரு தரப்பிலும் சம வாக்குகள் என்றொரு வியாக்கியானத்தை கூறி தனது வாக்கையும் அளித்து அரசமைப்பு பேரவை ஜனாதிபதியின் பரிந்துரையை ஏற்பதாகக் கூறி தேசபந்து தென்னக்கோனை பொலிஸ்மா அதிபராக நியமிக்கச் செய்திருக்கிறார் சபாநாயகர். இதுவும் அவரது மோசமான நடவடிக்கையின் வெளிப்பாடு.

எதிர்க்கட்சிகள் எப்போது நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்குச் சென்றனவோ, எதிர்க்கட்சிகளின் நம்பிக்கையை வென்றெடுக்க முடியாதவராக சபாநாயகர் மாறிவிட்டார். அதன் பின்னர் அந்தக் கதிரையில் இருப்பது அவருக்கு அழகன்று. நடுநிலைமையாக இருப்பது மாத்திரமன்றி நடுநிலைமையாக இருப்பது போன்றாவது காட்டப்பட வேண்டும் என்ற வாசகம் சபாநாயகருக்கு முக்கியம். அதற்கான தகுதியை அவர் இழந்துவிட்டார். நம்பிக்கையில்லாத் தீர்மானம் வென்றாலும் தோற்றாலும், சபாநாயகர் என்ற தகுதிக்கான பெறுமதியை மஹிந்த யாப்பா இழந்து விட்டார் என்பதே உண்மை.



# வடக்கில் கால்பதிக்க அதானிக்கு அனுமதி

**கொழும்பு, மார்ச் 1**

**வடக்கு மாகாணத்தில் பூநகரி காற்றாலை மின்சக்தித் திட்டத்தில் 355 மில்லியன் டொலர் முதலீட்டை மேற்கொள்ளும் அதானிக் குழுமத்தின் திட்டத்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நிலைபேறான வலுசக்தி அதிகாரசபை இந்த அனுமதியை வழங்கியுள்ளது.**

இந்தத் திட்டம் காற்றாலை மின்சக்தித் திட்டமாக அமைவதோடு மட்டுமல்லாமல் மின்சக்தி நெருக்கடி, பொருளாதாரம், சூழல் நிலைபேறான தன்மை போன்ற முக்கியமான பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்படும் வகையில் அமையவுள்ளது.

234மெகாவாட் திறன் கொண்ட இந்தத் திட்டம், இலங்கையின் புதுப்பிக்கத்தக்க வலுசக்தித் திறனுக்கு பெரும் பங்களிப்பை வழங்கும் என்றும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை மன்னார் காற்றாலைத் திட்டத்தை அதானி குழுமத்துக்கு வழங்க வேண்டுமென்ற கோரிக்கை மோடியால் விடுக்கப்பட்டதாக எதிர்ப்புகள் வெளியாகியிருந்த பின்புலத்திலேயே இந்தத் திட்டத்துக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## கையிருப்பு அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 1

நாட்டின் உத்தியோகபூர்வ கையிருப்புகள் ஜனவரி மாதத்தில் நூற்றுக்கு 2.3 வீதத்தால் அதிகரித்துள்ளது. இது தொடர்பில் மத்தியவங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில், கடந்த டிசெம்பரில் 4,392 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்த கையிருப்பு, ஜனவரியில் 4, 491 மில்லியன் அமெரிக்க டொலராகப் பதிவாகியுள்ளது - என்றுள்ளது. (ச-இ)



## ஏலம் விடப்படும் எயார்லைன்ஸ்!

கொழும்பு, மார்ச் 1

சிறிலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தை விற்பனை செய்வதற்கான ஏலம் நேரடியாக நடத்தப்படவுள்ளது என்று துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

சிறிலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தை விற்பனை செய்ய நாங்கள் ஏலத்துக்காக . மனுக்களை கோரியுள்ளோம் இதற்கென தொழில் நுட்பக் குழுவொன்று மதிப்பீடு செய்யவுள்ளது. இறுதியாக, அது அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும். - என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

## தேசபந்து பதவியேற்பு

கொழும்பு, மார்ச் 1

இலங்கையின் 36 ஆவது பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ள தேசபந்து தென்னக்கோன் தனது கடமைகளை நேற்றுப் பொறுப்பேற்றுக்கொண்டார். அண்மையில் ஜனாதிபதியின் செயலாளரால் பொலிஸ்மா அதிபருக்கான நியமனக் கடிதம் வழங்கப்பட்டிருந்தது. (எ-இ)

## மின்கட்டணம் குறைப்பு தீர்மானம் இன்னுமில்லை

மின்சாரக் கட்டணக் குறைப்பு தொடர்பில் இறுதித் தீர்மானம் இதுவரை எடுக்கப்படவில்லை என்று பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு தெரிவித்துள்ளது. பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு உறுப்பினர்கள் கூடி நேற்று முன்தினம் கலந்துரையாடினர். எதிர்வரும் வெள்ளிக்கிழமை மீண்டும் கூடி இதுதொடர்பில் தீர்மானம் எடுக்கப்படவுள்ளது என்றும் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு உறுப்பினர்கள் குறிப்பிட்டார். (ச-இ)

## நாளை

02.03.2024

**சனிக்கிழமை**

**மாசி–19**

சுபநேரம் : 03.27 - 04.57

ராகுகாலம் : 09.27 - 10.57

## நாளொரு நல்வார்த்தை

காலம் கடந்த பின் துன்பங்கள் அவற்றின் கூர்மையை இழந்து விடுகின்றன.

– அசோகமித்திரன்–

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பசுமை அறிவொளி நிகழ்ச்சி

கல்லாரைக் கிராமத்திலுள்ள கல்லாரை வளர்மதி சனசமூக நிலைய முன்றிலில் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் பசுமை அறிவொளி நிகழ்ச்சி கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

வளர்மதி சனசமூக நிலையத்தின் தலைவர், மிதுசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன், வளர்மதி சனசமூக நிலையத்தினர், கிராம மாணவர்கள் மற்றும் பெற்றோர் எனப் பலர் பங்குபற்றியிருந்தனர். (ப -27)

**Grade 10-11 Science**
**A/L Chemistry English Medium**
2024, 2025 Batch Tamil/ English ஆசிரியரால் (B.Sc, M.Sc Chemistry) குழுவாகக் கற்பிக்கப்படும்.
**076 410 5838**

## மரண அறிவித்தல்

தாயின் மடியில் 17 . 12 . 2010



இறைவன் அடியில் 29 . 02 . 2024

### உதயகுமார் சோபிதன்

அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட உதயகுமார் சோபிதன் நேற்று (29.02.2024) வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் உதயகுமார்-நிலாஜினி தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வனும், செல்வரத்தினம் - சின்னப்பிள்ளை, வீரவாகு - மகேஸ்வரி ஆகியோரின் பேரனும், கவிஷஜன், அக்ஷயன், சஸ்வின் ஆகியோரின் பாசமிகு அண்ணனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.03.2024) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று, தகனக் கிரியைக்காக பூதவுடல் அளவெட்டி கேணிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**
**குமார் (தந்தை) - 077 836 5492**
**கணேஷ் (மாமா) - 077 865 2112**

(CR 42010) A-1

## மரண அறிவித்தல்

பிறப்பு 19 . 04 . 1958



இறப்பு 15 . 02 . 2024

### செல்வி ஜெகதீஸ்வரி சின்னத்துரை (ஜெகா)

யாழ். உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி ஜெகதீஸ்வரி சின்னத்துரை கடந்த 15.02.2024 அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-நல்லமுத்து தம்பதியினரின் கனிஸ்ட புத்திரியும், தபேந்திரன் (லண்டன்), காலஞ்சென்றவர்களான தவமலர், குலேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கமலநாதன், சாந்தினிதேவி ஆகியோரின் மைத்துனியும், பரந்தாமனின் சித்தியும், கஜீபன், ஸ்டீபன் ஆகியோரின் மாமியாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் கடந்த 22.02.2024 அன்று உரும்பிராய் இருளன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. தவிர்க்கமுடியாத காரணத்தினால் காலந்தாழ்த்தி அறிவிக்கப்பட்ட இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


தகவல்:
**சின்னத்துரை தபேந்திரன் (சகோதரன்)**
**077 041 5523**

**இந்துக்கல்லூரி வீதி,**
**உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.**

(CS/29396) J-1

## மரண அறிவித்தல்

மண்ணக வாழ்வு 26 . 02 . 1941



விண்ணக வாழ்வு 29 . 02 . 2024

### செல்வி பிறின்சஸ் மகிழ்மலர் இராமலிங்கம்

நுணாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி பிறின்சஸ் மகிழ்மலர் இராமலிங்கம் அவர்கள் நேற்று (29.02.2024) வியாழக்கிழமை அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரவியம் இராமலிங்கம் அவர்களின் புதல்வியும் அமரர் திருமலர் மாணிக்கசிங்கம் மற்றும் திரு இ.ஆனந்தராஜன் (Canada), அவர்களின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற நிரோஷன் மற்றும் திரு.மா.செ.சுதர்சன் (ஆசிரியர்), டெவினா (ஆசிரியர்), அவர்களின் அன்புச் சித்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (01.03.2024) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று உடுவில் (மல்வம்) சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**நுணாவில் மேற்கு,**
**சாவகச்சேரி.**

தகவல்: **மா. செ. சுதர்சன்**
**077 725 1296**

(CS 29399) V-1

## மரண அறிவித்தல்

பிறப்பு 04 . 05 . 1941



இறப்பு 29 . 02 . 2024

### கந்தையா செகராஜா

**(ஓய்வுபெற்ற சுகாதார சேவை உத்தியோகத்தர்)**

கொய்யாத்தோட்டம் புது வீதியை வசிப்பிடமாகக் கொண்ட கந்தையா செகராஜா நேற்று (29.02.2024) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சிவமலர் (ஓய்வுபெற்ற உப அதிபர்- சென். ஜோசப் வித்தியாலயம்) அவர்களின் அன்புக் கணவரும், அகல்யா (மாகாண பணிப்பாளர் - சமூக சேவைகள் திணைக்களம், வடக்கு மாகாணம்) அவர்களின் அன்புத் தந்தையாரும், சரோஜா, அனுரா (இந்தியா), சகுந்தலா (UK), அழகராஜா (பரிஸ்ரர் - UK), மல்லிகை புஷ்பம் (இளைப்பாறிய பிரதி அதிபர் - குருணாகல்), றியா ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான பாலச்சந்திரன், ஜெயச்சந்திரன், புஷ்பலதிகவதி, புஸ்பஇராஜவதி, புஷ்பஇரட்ணவதி மற்றும் சிவசந்திரன் (இளைப்பாறிய பேராசிரியர் - யாழ். பல்கலைக்கழகம்), இராஜமலர் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.03.2024) வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு 30/4, வைமன் வீதி, நல்லூரில் உள்ள இல்லத்தில் நடைபெற்று, கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**T.P: 021 221 5329**

தகவல்:
**குடும்பத்தினர்.**

(CS 29400) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமானப்படைக் கண்காட்சி; முற்றவெளியில் ஏற்பாடுகள்

இலங்கை விமானப்படை யின் 73 ஆவது ஆண்டை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ள விமானப்படையின் கல்வி மற்றும் தொழில்நுட்பக்கண்காட்சிக்கான முன்னேற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

இலங்கை விமானப் படைக் குச் சொந்தமான உலங்குவானூர்தியொன்று நேற்று முற்றவெளியை வட்டமிட்டுக் கண்காணித்துச் சென்றது.

எதிர்வரும் 6ஆம் திகதி தொடக்கம் 10 ஆம் திகதி வரை யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் 'தொழில்நுட்பம், கல்வி மற்றும் அபிவிருத்தி' எனும் தொனிப்பொருளில் இந்தக் கண்காட்சி நடைபெறவுள்ளது.

கண்காட்சியைப் பார்வையிடப் பெரும் எண்ணிக்கையான மக்கள் முற்றவெளியில் கூடுவர் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில் ஏற்பாடுகள் துரிதப்படுத்தப் பட்டுள்ளன. (ச-17)

**The Royal College of Jaffna**

3 மாதங்களில் ஆங்கிலத்தில் சரளமாகக் கதைபயில,

By- ந.விக்னேஸ்வரன் ஆச்சார்யார்,

ஓய்வு பெற்ற அரச உத்தியோகத்தர்.

(M.L.T), (M.L.S).

குபேரன் கட்டம்,

பிரான்பற்று வீதி, சங்கானை.

தொடர்பு:- 077 675 1649

(CS/54178) J-1



குப்பிழான் சிவபூமி ஞான ஆச்சிரமத்தில் மாசிமக சிறப்பு வழிபாடுகள் கடந்த சனிக்கிழமை நடைபெற்றன. (ப-66)

# ஆதனப் பெயர் மாற்றம்

யாழ். மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 18 சுவாமியார் வீதி 54/3 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் இராமலிங்கம் துரைசாமி சபாநடேசன் பெண் மாணிக்கம் என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம், இராமலிங்கம் துரைச்சாமி அவர்கள் 29.12.1945ம் திகதியிட்ட பிரசித்த நொத்தாரிசு தில்லையம்பலம் குமாரசாமி முகதாவில் 7754ம் இலக்க நன்கொடை உறுதி மூலம் யாழ்ப்பாணம் துரைசாமி வைத்தியநாதனுக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம், சுவாமியார் வீதி தற்போது ஐக்கியராச்சியத்தைச் சேர்ந்த இந்திராணிப்பிரியதர்சினி சுந்தரதாசன், சுந்தரதாசன் இராஜநாயகம், சௌந்தரராஜன் வைத்தியநாதன் ஆகியோர் பிரான்ஸ் ஐச் சேர்ந்த திருவருட்செல்வி சற்குருநாதன், சற்குருநாதன் கந்தசாமி,கனடாவைச் சோந்த வரதராஜன் வைத்தியநாதன், தில்லைராஜன் கைம்பெண் ராஜலட்சுமி, குமுதினி மகேந்திரன், சுந்தரம் மகேந்திரன் ஆகியோர் அற்றோனித் தத்துவக்காரர் இல் 20/3 சுவாமியார் வீதி, கொழும்புத்துறை மேற்கு, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ரோஹினி சாந்தகுமார் மூலம் வெளிப்பட்டு ரோஹினி சாந்தகுமார் மற்றும் பரராஜசிங்கம் சாந்தகுமார் 29.08.2020ம் திகதியிடப்பட்ட பிரசித்த நொத்தாரிசு மரியதாஸ் மகிழினி மடோனா முகதாவில் 411ம் இலக்க அறுதி உறுதி மூலம் யாழ்ப்பாணம் கொழும்புத்துறை இல 46A சுவாமியார் வீதி நடராஜா மகள் சுபத்திராதேவிக்கும் (ஆதன அட்டவணை 1) 29.08.2020ம் திகதியிடப்பட்ட பிரசித்த நொத்தாரிசு மரியதாஸ் மகிழினி மடோனா முகதாவில 412ம் இலக்க அறுதி உறுதி மூலம் யாழ்ப்பாணம் கொழும்புத்துறை இல 5 சுவாமியார் வீதி செல்வரட்ணம் புஸ்பாகரன் மற்றும் பெண் விஜயநிர்மலாவிற்கும் (ஆதன அட்டவணை 2) வழங்கியுள்ளனர்.

**ஆதன அட்டவணை 1**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளிக் கோவிற்பற்று யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவு யாழ்ப்பாணம் மாநகரசபை J/63 கிராமசேவையாளர் பிரிவு கொழும்புத்துறை இறை "பெற்றி வளவு அருகில்திகம் " நில.பர 4 இது தற்போது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் ந.கேதீஸ்வரன் 24.08.2020 திகதியிட்டு அளந்து வரைந்த 1677/1 ஆம் இலக்க நில அளவைப்படத்தில் துண்டு 1 முதல் துண்டு 3 வரை சுட்டப்பட்ட நில.பர.3குளி 03.88. இதில் துண்டு 1 எனச் சுட்டப்பட்ட பாகம் இதன் விசாலம் நிலப்பரப்பு ஒன்று குளி ஒன்பது (நில.பர 1குளி 9) ம் கிணறும் **இதற்கு எல்லைகள் :-**

வடக்கு கிழக்கு : சுப்பிரமணியம் சண்முகரெத்தினத்தின் ஆதனம்

மேற்கு : பசுபதி பெண் பாலமேகலாவின் ஆதனம்

தெற்கு : 1677/1ம் இலக்கப் படத்தில் துண்டு 2 என சுட்டப்பட்ட இதன் மிகுதிகு ஆதனமும் துண்டு 3 என சுட்டப்பட்ட 3 மீற்றர் அகலப்பாதையும். இன்னும் துண்டு 3 சுட்டப்பட்ட இதன் 3 மீற்றர் அகலப்பாதையால் போக்குவரத்து செய்யும் பாதைபாவிப்புரித்தும் மற்றும் இதன் தெற்கேயுள்ள 1677/1 ம் இலக்கப்படத்தில் துண்டு 2 எனச்சுட்டப்பட்ட ஆதனத்திற்கு கிணற்றில் தண்ணீர்ப்பங்கும் அதை நீர் இறைக்கும் இயந்திரத்தை பொருத்தி குழாய்வழியாக நீரைபெற்றுக்கொள்ளும் உரித்து புறநீங்கலாகவும் மற்றும் இதைச் சேர்ந்தவனைத்தும்.

**ஆதன அட்டவணை 2**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளிக் கோவிற்பற்று யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவு யாழ்ப்பாணம் மாநகரசபை J/63 கிராமசேவையாளர் பிரிவு கொழும்புத்துறை இறை "பெற்றி வளவு அருகில்திகம் " நில.பர 4 இது தற்போது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் ந.கேதீஸ்வரன் 24.08.2020 திகதியிட்டு அளந்து வரைந்த 1677/1 ஆம் இலக்க நில அளவைப்படத்தில் துண்டு 1 முதல் துண்டு 3 வரை சுட்டப்பட்ட நில.பர.3குளி 03.88. இதில் துண்டு 2 எனச் சுட்டப்பட்ட பாகம் இதன் விசாலம் நிலப்பரப்பு ஒன்று குளி எட்டு தசம் மூன்று ஐந்திற்கும் **எல்லைகள் :-**

கிழக்கு : சுப்பிரமணியம் சண்முகரெத்தினத்தின் ஆதனம்

வடக்கு : 1677/1 இலக்கப்படத்தில் துண்டு 1 எனச் சுட்டப்பட்ட இதன் மிகுதி ஆதனம்

தெற்கு : சுவாமியார் ஒழுங்கை

மேற்கு : 1677/1ம் இலக்கப் படத்தில் துண்டு 2 என சுட்டப்பட்ட இதன் மிகுதி ஆதனமும் துண்டு 3 என சுட்டப்பட்ட 3 மீற்றர் அகலப்பாதையும்.

துண்டு 1 ஆதனத்தில் உள்ள கிணற்றில் பங்கும் குறித்த நீரை தமது ஆதனத்திற்குள் எடுத்துச் செல்லும் உரிமையும் மட்டும் மற்றும் இதைச்சேர்ந்தவனைத்தும்.

தற்போது இவ்வாதனத்தில் ஆதன அட்டவணை 1இல் விபரிக்கப்படும் ஆதனத்தினை 411ம் இலக்க அறுதி உறுதி மூலம் நடராஜா மகள் சுபத்திராதேவியும் ஆதன அட்டவணை 2இல் விபரிக்கப்படும் ஆதனத்தினை 412ம் இலக்க அறுதி உறுதி மூலம் செல்வரட்ணம் புஸ்பாகரன் மற்றும் பெண் விஜயநிர்மலாவும் என்ற இருவரும் தமது பெயரை எமது ஆதனப்பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார்கள் எனவே இவ்வாதனத்திற்கு முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராதவிடத்து குறித்த ஆதன அட்டவணை 1இல் விபரிக்கப்படும் ஆதனமானது நடராஜா மகள் சுபத்திராதேவிக்கும், ஆதன அட்டவணை 2இல் விபரிக்கப்படும் ஆதனமானது செல்வரட்ணம் புஸ்பாகரன் மற்றும் பெண் விஜயநிர்மலாவும என்னும் பெயர்களுக்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பொறுப்பிற்கும் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**ஆணையாளர்,**

**மாநகரசபை, யாழ்ப்பாணம்.**

(cr.41900) (N-1)

# 25 ஆவது அகவை நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில்

01.03.1999





ஆண்டவன் அடியில்

13.09.2021

## அமரர் ஸ்ரீவாணன் டினோசிகா

மீளாத்துயில் கொண்டு - எம்மை ஆறாத்துயரில்
ஆழ்த்திச்சென்றீரோ! கண்முன்னே வாழ்ந்த
காலம் கனவாகியதே ! உம் நினைவுகள் என்றும்
நிஜமாகியதே! அரன் திருவடியில் உம் ஆன்மா
அமைதிபெற உம் பிறந்தநாளில் குதூகலிக்க
நீரின்றி நிறைந்த உங்கள் நினைவுகளுடன் நாம்!
இளவயதினிலேயே உற்றார் மெச்ச வாழ்ந்தவளே!
அளவிடமுடியா அன்பு பொழிந்தவளே!
உமது இருப்பு இன்றி இங்கு நாம் தவிக்கின்றோம்
நினைவெல்லாம் உம்மைச் சுமந்து விழிநீர் வடிக்கின்றோம்
உமை அனுதினமும் ஆராதிக்கின்றோம் ! உம்
அகவை நாளில் - எம் கண்ணீர் பூக்களை சமர்ப்பிக்கின்றோம்.

**ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி!!!**

சங்குவேலி வடக்கு,
மானிப்பாய்.

உம் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(cs 29383) (N-1)

# ஆதனப்பெயர்மாற்றம்

யாழ். மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 06, ஆள்காட்டி வளவு ஒழுங்கை, 11 ம் ஆதன இலக்கத்தைக் கொண்ட ஆதனம் சொந்தக்காரர் என்ற பெயரில் யாழ். மாநகரசபை ஆதனப்பதிவேட்டில் காணப்படுகின்றது.

இதன் கீழ் அட்டவணையில் நன்கு விபரிக்கப்படும் ஆதனம் இளையதம்பி குமாரசுவாமியும் பெண் இராசம்மாவும் 01.07.1962ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு கந்தையா தில்லையம்பலம் முகதாவில் 1950ம் இலக்கத்தில் நிறைவேறிய சீதன உறுதி மூலம் காசிப்பிள்ளை சவுந்தரராசா பெண் உருத்திராதேவி என்பவரிற்கு சீதனமாக வழங்கியுள்ளனர். பின்னர் குறித்த ஆதனத்தை காசிப்பிள்ளை சவுந்தரராசாவும் பெண் உருத்திராதேவியும் 13.08.2018 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு லிங்கா துரைராஜா முகதாவில் 10836ம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் மகாதேவன் கிருஷ்ணமோகனிற்கும், கிருஷ்ணமோகன் பெண் தனுஷாவிற்கும், கனகலிங்கம் நரசிம்மனிற்கும், நரசிம்மன் பெண் அனுஷாவிற்கும் நன்கொடையாக வழங்கியுள்ளனர்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி, சுண்டிக்குளி கோவிற்பற்று, சிவியாதெரு இறை: "பிராயன் தாழ்வு வளவு" நிலப்பரப்பு (4,1/2) இது நில அளவையாளர் P.தனராசாவின் 2838A படத்தில் லொட் 1 என காட்டப்பட்டுள்ளது. இந்த நிலப்பரப்பு நான்கு குளி ஒன்பதிற்கும் எல்லை

கிழக்கு : தனியார் ஒழுங்கை

வடக்கு : யோகேஸ்வரன் பெண் தில்லைநாயகியின் ஆதனமும் பத்மநாதன் பெண் கமலாதேவியின் ஆதனமும்

மேற்கு : கிருஷ்ணபிள்ளை பெண் யசோவின் ஆதனம்

தெற்கு : ஆள்காட்டி ஒழுங்கை

இதடங்கலும்.

கிராம சேவையாளர் பிரிவு : 3/96

பிரதேச செயலர் பிரிவு : நல்லூர்

பிரதேசசபை : யாழ். மாநகரசபை

தற்போது மகாதேவன் கிருஷ்ணமோகனும், கிருஷ்ணமோகன் பெண் தனுஷாவும், கனகலிங்கம் நரசிம்மனும், நரசிம்மன் பெண் அனுஷாவும் இவ்வாதனத்தை தமது பெயர்களினை எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு தமது தத்துவகாரரான காசிப்பிள்ளை சவுந்தரராசா மூலம் விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் ஒரு பகுதிக்கு/ முழுவதற்கும் உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது மகாதேவன் கிருஷ்ணமோகனும், கிருஷ்ணமோகன் பெண் தனுஷாவும், கனகலிங்கம் நரசிம்மனும், நரசிம்மன் பெண் அனுஷாவும் எனும் பெயர்களிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பிரச்சினைகளுக்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**ஆணையாளர்,**

**மாநகரசபை,**

**யாழ்ப்பாணம்.**


(cr.42001) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னா ரமேஷ் டுபாயில் கைது

பாதாள குழுவின் தலைவரும், போதைப் பொருள் கடத்தல்காரருமான 'மன்னா ரமேஷ்' டுபாயில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார். சர்வதேச சிவப்புபிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த மன்னா ரமேஸும், அவரது மனைவியும் காரொன்றில் பயணித்துக் கொண்டிருக்கையிலேயே இந்தக் கைது இடம்பெற்றுள்ளது. மன்னா ரமேஷை நாட்டுக்கு கொண்டுவருவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றது என இலங்கை பொலிஸ் தரப்பு தகவல் தெரிவிக்கின்றது. (ம-44)

## மரண அறிவித்தல்



தோற்றம் 22 . 09 . 1942

மறைவு 28 . 02 . 2024

### பெரியண்ணன் சிவனு

நுவரெலியா-மஸ்கெலியா பிறவுன்சிக் தோட்டத்தைப் பிறப்பிடமாகவும், புலோலி தெற்கு உபயகதிர்காமம் கந்த முருகேசனார் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட பெரியண்ணன் சிவனு 28.02.2024 புதன்கிழமை சிவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பெரியண்ணன் கதிராயி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், பார்வதி சிவனு அவர்களின் அன்புக் கணவரும், பூபாலசிங்கம் (உதவிக்கல்விப் பணிப்பாளர்-யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலகம்), விவேகானந்தன், கமலாவதி யோகேஸ்வரன், விக்னேஸ்வரி யுகசீலன் ஆகியோரின் அன்புத் தந்தையும் கோகிலா பூபாலசிங்கம் (MSO-பருத்தித்துறை பிரதேச சபை), அம்பிகா விவேகானந்தன் (DO-பிரதேச செயலகம் சாவகச்சேரி), யோகேஸ்வரன், யுகசீலன் ஆகியோரின் அன்பு மாமனாரும், P.ரட்ணதாஸ், P.மோகனதாஸ், அமரர்களான தாயம்மா சுப்பிரமணியம், தெய்வானை வேலுச்சாமி, ராசம்மா சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.03.2024) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 26598) V-1

## விழிநீர் அஞ்சலி



மண் மகிழ 15.07.1940

கண் நெகிழ 28.02.2024

கிராமிய பொருளாதார கூட்டுறவுத்துறை ஆய்வாளரும், வடக்குக் கூட்டுறவு அபிவிருத்தி வங்கியின் (NCDB) தலைவரும், யாழ்ப்பாணப் பல்கலைக் கழக விரிவுரையாளருமான **கலாநிதி அகிலன் கதிர்காமர்** அவர்களின் பாசமிகு தாயார்.


### திருமதி சகுந்தலாதேவி கதிர்காமர்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு மு/புதுக்குடியிருப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினராகிய நாம் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், பொதுமுகாமையாளர்,
பணிப்பாளர்கள், பணியாளர்கள், அங்கத்தவர்கள்
மு/புதுக்குடியிருப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

(CR/42007) J-1

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 09 . 12 . 1948

மறைவு 13 . 03 . 2023

### அமரர் தம்பிஐயா குகதாசன்
(ஆச்சாரியார்)

திதி: 01.03.2024 அபரபக்க சஷ்டி


வானத்தில் பரந்த பௌர்ணமி நிலா போல்
பிரகாசித்த எமது வாழ்க்கை
திடீரென இறைவன் உம்மை அழைத்ததனால்
இருள் கவிந்து அமாவாசைச் சந்திரன்
வந்து மறைத்தாற் போல் ஆனதேனோ?
ஆகாயத்தில் பூத்துச் சிரித்திருந்த நட்சத்திரங்கள்
எல்லாம் திடீரென ஒளி இழந்தாற்போல் எனது
வாழ்க்கை ஆனதேனோ?
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை பிரார்த்திக்கின்றேன்.
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !

ம்பலவாணர் வீதி,
ளி கோவிலடி, உடுவில்

பிரிவால் துயருற்றிருக்கும்
உங்கள் அன்பு மனைவி

(CS/54158) J-1

## இரண்டாம் ஆண்டு நினைவு தினம்



தோற்றம் 20 . 10 . 1937

மறைவு 22 . 02 . 2022

### அமரர் தம்பிப்பிள்ளை உத்தமசீலன்
(நாடகக் கலைஞர்)

அன்பின் திருவுருவே எங்கள் ஆருயிரே
பாசத்தின் உறைவிடமே பாசமுள்ள அப்பாவே
இரக்கமுள்ள இல்லத் தலைவனே
உங்களை நாம் இழந்து ஈராண்டுகள் ஆனதுவோ
வெளிப்படையாகப் பேசும் வெள்ளை உள்ளமும்
சுயநலம் இல்லாத அன்பும்
நிகரில்லா நேசமும் எம்மீது காட்டினீர்கள்
கலை என்றால் கவலைகள் மறந்திடுவீர்
நாடகக் கலையில் நடிப்பின் மேன்மையால்
பல ரசிகர்களின் பாராட்டினையும் பெற்றீர்கள்
கண்ணை இமை காப்பதுபோல்
எங்கள் மீது கவனம் கொண்ட நீங்கள்
இன்று எம் கண்முன்னே இல்லாதது
எங்களைக் கண்கலங்க வைக்குதையா
எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்
வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

பதிவாளர் வீதி,
திருநெல்வேலி கிழக்கு.

குடும்பத்தினர்.

(CS/54180) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சங்கானை, கரைச்சி மயான இளைப்பாறு மண்டபக் கட்டட வேலைகள் வலி.மேற்குப் பிரதேசசபையின் நிதியொதுக்கீட்டில், மயான அபிவிருத்திச் சபையால் முன்னெடுக்கப்பட்டன. குறித்த வேலைத்திட்டம் மழைக் காலத்தால் நிறுத்தப்பட்ட நிலையில் அதை மீளத் தொடர்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ப-125)



வடமாகாணக் கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகால் உடல், உள மேம்பாட்டுக்காக இலவசமாக நடத்தப்பட்டு வருகின்ற இலவச யோகாக்கலைக் கற்கைநெறியின் புதிய பிரிவு நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் பின் வீதியில் அமைந்துள்ள நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. (ப-66)


# கண்ணீர் அஞ்சலி!



கிராமிய பொருளாதார கூட்டுறவுத்துறை ஆய்வாளரும், வடக்குக் கூட்டுறவு அபிவிருத்தி வங்கியின் (NCDB) தலைவரும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளருமான கலாநிதி அகிலன் கதிர்காமர் அவர்களின் பாசமிகு தாயார்

**திருமதி சகுந்தலாதேவி கதிர்காமர்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சங்கானை ப.நோ.கூ. சங்கம்,
சங்கானை.

தலைவர்,
பணிப்பாளர்கள், பணியாளர்கள்.

(CR 42011) S-1





மரக்காரம்பளை கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட மணிபுரம் கிராமத்தில் 'பாரம்பரிய வாழ்வியலும் உள்ளூர் சந்தையும்' என்ற நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. மரக்காரம்பளை சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் என்.ஜெயராணி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதேச செயலாளர் நா.கமலதாசன், சமுர்த்தி அதிகாரிகள் கலந்து கொண் டனர். (ப-110)




# மரண அறிவித்தல்

## கந்தசாமி ஸ்ரீரஞ்சன்



கொக்குவில் கிழக்கை பிறப்பிடமாகவும், கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி ஸ்ரீரஞ்சன் 29.02.2024 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி, சிவபாக்கியத்தின் மூத்த புதல்வனும், ரஞ்சினிதேவி (ரஞ்சி) யின் அன்புக் கணவரும், ரஞ்சினி, றோகினி, கெங்காதேவி (பத்மினி), அன்னபாக்கியம், வசந்தினி, யோகராணி, மகாதேவா (தேவா), சிவகணேசன் மற்றும் காலஞ்சென்ற யோகேஸ்வரி யின் அன்புச் சகோதரனும், மகேந்திரன் (மகான்), றஜா, மாலதி (மதி), தர்மலிங்கம், ரட்ணமூர்த்தி, றஜனி, சுதாகரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், இராசமலரின் அன்புப் பெறாமகனும், கண்ணன், சைலஜா, றொசாந், சுஜிந்தன், தர்சிகா, பிரியதர்சனா, பிரதீப், மகிந்தராசன், செல்வரதி ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரியந்தன், கீதன், அகிஷன், ஹனிஸ்கா, சதீஸ்காந், தருணிகா ஆகியோரின் பெரிய தந்தையும், டென்சிகா, விதுசிகா, யதுசிகா, கனிஷ், டருசான், தஸ்மிகா அபிசாயி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (01.03.2024) நண்பகல் 12.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல. 48, புகையிரத நிலைய வீதி,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 899 8078, 077 987 4486

(CS 10101) W-1




காரைநகர்ப் பிரதேசசெயலக ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் வருடாந்தக் குருதிக்கொடை முகாம் நிகழ்வு பிரதேசசெயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் முன்னெடுக்கப்பட்டது. (ப-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிப்பறியில் ஈடுபட்ட இருவர் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 1

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பல்வேறு வழிப்பறிகளில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இருவர் யாழ்ப்பாணம் மாவட்டக் குற்றத்தடுப்புப் பிரிவு உபபொலிஸ் பரிசோதகர் பிரதீப் தலைமையிலான குழுவினரால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்டக் குற்றத்தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த முறைப்பாடுகளுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின்போதே அவர்கள் இருவரும் கைதுசெய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் நகரப்பகுதியைச் சேர்ந்த அவர்கள், யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் மாலை 6 மணி முதல் இரவு 9 வரை வீதியில் பயணித்தவர்களை இலக்குவைத்து நீண்டகாலமாக வழிப்பறியில் ஈடுபட்டு வந்துள்ளனர் என்பது முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இருவரும் இன்றையதினம் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர்.

சந்தேகநபர்கள், இதுவரை பலரிடம் சிறியதொகைகளைப் பறித்தெடுத்துள்ளனர். ஆனால், சிறிய தொகைதானே என்பதால், அவர்களுக்கு எதிராக பொலிஸ் முறைப்பாடுகளைப் பதிவுசெய்ய பலரும் முன்வரவில்லை. இவ்வாறான அசண்டையீனத்துடன் இருக்கவேண்டாம் என்றும், சிறிய தொகையாயினும் குற்றச்செயல் தொடர்பில் பொலிஸ் முறைப்பாடு பதியப்பட வேண்டும் எனவும் பொதுமக்களிடம் பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர். (ம-26)



# நல்லை ஆதீனத்தின் முதல்வரை சந்தித்தார் கொன்சியூல் ஜெனரல்

யாழ்ப்பாணம், மார்ச் 1

யாழ்ப்பாணம் இந்தியத் துணைத்தூதரகத்தின் கொன்சியூல் ஜெனரலாகப் பொறுப்பேற்றுள்ள சாய் முரளி, நல்லை ஆதீன முதல்வர் ஶ்ரீலஶ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளை நல்லை ஆதீனத்தில் வைத்து மரியாதை நிமித்தமாகச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

சந்திப்பில் நல்லை ஆதீனத்தின் செயலாளரும், சிவபூமி அறக்கட்டளையின் ஆதீன முதல்வருமான கலாநிதி ஆறு.திருமுருகன், யாழ். இந்தியத் துணைத்தூதரக அதிகாரிகள் என்போரும் உடனிருந்தனர். (ம-66)

## தொல்லியலுக்கு இடையூறாம்:

# ஜூலைக்கு வழக்கு ஒத்திவைப்பு

முல்லைத்தீவு, மார்ச் 1

குருந்தூர்மலையில் தொல்லியல் திணைக்களத்தின் செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படுத்தியதாகக் கூறி தொடரப்பட்ட வழக்கு ஜூலை மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு - குருந்தூர் மலையில் கடந்த 2022 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 12ஆம் திகதியன்று இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு தொல்லியல் திணைக்களத்தின் செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படுத்தினர் என்று வடமாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன், முன்னாள் கரைதுறைபற்று பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர் இ.மயூரன் ஆகியோர் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

அத்துடன், நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சி.சிவமோகன், பிரதேசசபை முன்னாள்உறுப்பினர்சி.லோகேஸ்வரன் ஆகியோர் மீதும் இதே குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்தன.

இந்த வழக்கு முல்லைத்தீவு நீதிமன்றத்தில் விசாரணைக்காக நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போதே, வழக்கு ஜூலை மாதம் 25 ஆம் திகதிக்குத் தவணையிடப்பட்டது. அத்துடன், வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள அனைவரும் அன்றையதினம் நீதிமன்றில் முன்னிலையாக வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-246)

## பேருந்து...

டங்கள் மற்றும் மாகாணங்களுக்கு இடையேயான தனியார் போக்குவரத்துச் சேவைகளைப் புறக்கணித்து நீண்ட தூரத் தனியார் பேருந்துச் சாரதிகள், நடத்துநர்கள் யாழில் தொடர் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

போராட்டத்தின் இரண்டாம் நாளான நேற்றுக்காலை தனியார் பேருந்துச் சாரதிகள், நடத்துநர்கள் யாழ்.மத்திய பேருந்து நிலையத்தை முற்றுகையிட்டுத் திடீர்ப் போராட்டம் நடத்தினர். இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான அரச பேருந்துகள் சேவையில் ஈடுபட முடியாதளவுக்கு அவர்களால் நெருக்கடி ஏற்படுத்தப்பட்டது. இதனால் பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டனர்.

இதையடுத்து பொலிஸார் குவிக்கப்பட்டனர். இதனால் ஒருவித பதற்ற நிலைக்குள் யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையம் ஆட்பட்டது.

அதன் பின்னர் வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான அங்கஜன் இராமநாதன் ஆகியோர் சம்பவ இடத்துக்கு வருகைதந்து நிலைமைகளைக் கேட்டறிந்தனர். இது தொடர்பில் விரைவில் தீர்வொன்று வழங்கப்படும் என்று ஆளுநரால் தனியார் பேருந்துகளின் சாரதிகள் மற்றும் நடத்துநர்களுக்கு உத்தரவாதம் வழங்கப்பட்டது. (அ-ம-66-26-35-26)

## உத்திக...

கூறியே அவர் இவ்வாறு தஞ்சம் கோரியுள்ளார் எனத் தெரியவருகின்றது. விமல் வீரவன்ஸ தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி உறுப்பினரான இவர், கடந்த பொதுத்தேர்தலில் ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் சார்பில் அநுராதபுரம் மாவட்டத்தில் போட்டியிட்டார். அவருக்கு ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட விருப்பு வாக்குகள் கிடைத்தன.

2023ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் உத்திக பிரேமரத்னவை இலக்கு வைத்துத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது. இவ்வாறானதொரு பின்புலத்தில் சில நாள்களுக்கு முன்னர் அவர் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்தார். டிசெம்பர் மாதம் தமது குடும்பம் சகிதம் டுபாய் சென்றுள்ள அவர் அங்கிருந்து கனடா சென்றுள்ளார் எனக் கூறப்படுகின்றது. கனடாவில் இருந்தே இராஜினாமா கடிதத்தையும் அனுப்பி வைத்துள்ளார் என்றும் தெரியவருகின்றது. (அ-ம-44)

## தமிழரசின்...

ஜனவரி 21 மற்றும் 27ஆம் திகதிகளில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிர்வாகத் தெரிவுகளை இரத்துச் செய்யக் கோரி, திருகோணமலையைச் சேர்ந்தவர் திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கில், இடைக்காலக் கட்டாணை வழங்கப்பட்டிருந்தது. இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இதன்போது, மாவை.சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், ச.குகதாசன், சீ.யோகேஸ்வரன் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணிகள் கே.வி.தவராசா, புவிதரன் ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர். இந்த வழக்கில் வழங்கப்பட்ட கட்டாணையை நீடிக்கவேண்டுமென வழக்காளி சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி ஜெப்ரி அழகரட்ணம் கோரினார்.

இதற்குப் பதிலளித்த பிரதிவாதிகள் தரப்புச் சட்டத்தரணி கே.வி.தவராசா, இது சாதாரண எல்லை, காணிப் பங்கீட்டு வழக்கல்ல. ஓர் இனத்துடன் தொடர்புடைய, பாரம்பரிய கட்சியுடன் தொர்புடைய வழக்கு. இந்த வழக்கை தொடர்ந்து நீடிக்க - தொடர்ந்து நடத்த - நாம் தயாரில்லை. இதனால் இனநலனில் அடிப்படையில் வழக்கை முடித்து, கட்சியை இயங்கச் செய்வதற்காகச் சில விட்டுக்கொடுப்புகளைச் செய்யவும் தயாராக இருக்கிறோம். வழக்காளிகள் கோரும் நிவாரணங்களை வழங்க நாம் தயாராக இருக்கிறோம். தமிழரசுக் கட்சியின் தலைவர் பதவிக்கான போட்டி நடந்ததாலேயே இந்த நிலைமை வந்தது. சிறீதரன் வெற்றி பெற்றிருக்காவிட்டால் இந்த வழக்கே வந்திருக்காது. ஆனால் சிறீதரன் பெரும்பான்மையான வாக்குகளால் வென்றார். அவர் அந்த வெற்றியையும் துறந்து, கட்சியை மீள இயங்கச் செய்ய விரும்புகிறார். அதனால் தலைவர் தெரிவையும் மீள நடத்தத் தயாராக இருக்கிறோம் - என்றார்.

மூன்றாம் மற்றும் ஐந்தாம் பிரதிவாதிகளான ப.சத்தியலிங்கம் மற்றும் எக்ஸ்.குலநாயகம் ஆகியோர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி இது தொடர்பில் ஆட்சேபனையைத் தாக்கல் செய்வதற்கு அவகாசத்தை மன்றில் கோரினார். இதை ஜனாதிபதி சட்டத்தரணிகளான கே.வி.தவராசா, புவிதரன் ஆகியோர் ஆட்சேபித்து 'பிரதிவாதிகள் இருவரும் இந்த மன்றிலேயே இருப்பதால் அவர்களின் நிலைப்பாட்டை நேரில் கேட்கவேண்டும்' என்றனர். இதை வழக்காளிகள் சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி ஜெப்ரி அழகரட்ணம் ஆட்சேபித்து, 'பிரதிவாதிகள் சார்பில் சட்டத்தரணியொருவர் முன்னிலையானதால் பிரதிவாதிகளை இது தொர்டர்பில் கருத்துக் கேட்கவேண்டிய அவசியம் இல்லை' - என்றார்.

ஆயினும் அதற்குப் பதிலளிக்கும் வகையில், ஜனாதிபதி சட்டத்தரணிகளான கே.வி.தவராசாவும், புவிதரனும் 'இது கட்சி சார்ந்த வழக்கு, பிரதிவாதிகள் அனைவரும் கட்சி பிரமுகர்கள், கட்சித் தீர்மானமும் இதில் தொடர்புபட்டுள்ளது. எனவே இங்கு பிரசன்னமாகியுள்ள பிரதிவாதிகளிடம் அவர்களின் நிலைப்பாட்டைக் கேட்பதே பொருத்தமானது' என்று சுட்டிக்காட்டினர். இதை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம் மூன்றாம் மற்றும் ஐந்தாம் பிரதிவாதிகளான ப.சத்தியலிங்கம் மற்றும் குலநாயகம் ஆகியோரின் நிலைப்பாட்டை வினவியது. இதன்போது அவர்கள் ஏனைய பிரதிவாதிகளின் நிலைப்பாட்டுடன் ஒத்துப்போவதாக மன்றில் தெரிவித்தனர்.

இந்த வழக்கில் 7 பிரதிவாதிகள். அதிலொருவரான எம்.ஏ.சுமந்திரன், அவரது தாயாரின் இறுதி நிகழ்வுகள் நடந்து கொண்டிருப்பதால் மன்றில் முன்னிலையாகவில்லை. அவர் சார்பில் எந்தவொரு சட்டத்தரணியும் முன்னிலையாகவும் இல்லை. எனவே, அவரது நிலைப்பாட்டை அறிய ஏப்ரல் 5ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. சுமந்திரனும் ஏனைய எதிராளிகளின் கருத்தோடு இசைவதாக மன்றில் தெரிவித்தால் வழக்கு சுமுகமாக முடிவுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

**யாழ்ப்பாணத்தில்**

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மாநாட்டுக்கு எதிராக யாழ்ப்பாணம் நீதிமன்றால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடையுத்தரவு தொடர்பான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. பிரதிவாதிகள் தரப்புச் சட்டத்தரணிகள் பதில் மனுத் தாக்கல் செய்யக் கோரியமையால் வழக்கு ஏப்ரல் 25ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

இந்த வழக்குத் தொடர்பில் மூத்த சட்டத்தரணி என்.சிறீகாந்தா தெரிவித்ததாவது:-

இந்த வழக்குகள் சுருக்கமாக முடிக்கப்படக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது என்பது இரண்டு தரப்பினரதும் பொதுவான நிலைப்பாடாக இன்று (நேற்று) யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்திலே தெரிவிக்கப்பட்டது. இருந்தாலும் சட்ட விதிகளுக்கு அமைவாக நாங்கள் மறுமொழியைத் தாக்கல் செய்வதற்கு திகதி குறிப்பிடுமாறு நான் கேட்டிருந்தேன். அந்த அடிப்படையில் எதிர்வரும் ஏப்ரல் 25ஆம் திகதியன்று மறுமொழி தாக்கல் செய்யுமாறு வழக்கு தவணையிடப்பட்டுள்ளது. அத்தோடு ஐந்தாவது எதிராளியான சண்முகம் குகதாசனுக்கு அழைப்புக் கட்டளை சேர்ப்பிக்கப்படாத நிலையில், மீண்டும் அழைப்புக் கட்டளை அனுப்பப்படுவதற்கும் உத்தரவிடப்பட்டிருக்கிறது - என்றார். (அ-எ-ஒ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3 பேர்...

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்ட மற்றொரு இலங்கையரான அவர், சாந்தனின் மறைவையடுத்து தம் வலிகளை வெளிப்படுத்தி மிக உணர்வு பூர்வமாக இந்தக் கடிதத்தை வரைந்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் உள்ளதாவது:-

உங்களை உங்களோடு ஒருவனாக, சுதந்திர மனிதனாக இல்லாமல் எங்களில் ஒருவரான சாந்தனை இழந்து இதோ இந்தக் கம்பிகளுக்குப் பின்னால் இருந்து இப்படிச் சந்திக்க நேர்ந்தது மிகுந்த வருத்தமளிக்கிறது. 32 வருட நீண்ட சிறைக் கொட்டகைக்குப் பிறகு கடந்த 2022ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11ஆம் திகதி உச்சநீதிமன்றம் விடுதலை செய்த ஆறு பேரில் நானும் ஒருவன். அந்த ஆறுபேரில் நான், ஜெயக்குமார், முருகன் மற்றும் சாந்தன் ஆகிய நால்வரையும் இலங்கைத் தமிழர் எனக் காரணம் கூறி இந்திய வெளிவிவகாரத்துறை நாட்டைவிட்டு வெளியேற்றும் வரை சிறப்பு முகாமில் அடைத்துவைக்க உத்தரவிட்டது.

**சிறையை விடவும் கொடுமையான வாழ்வு**

தொலைந்துபோன வாழ்க்கையை எதிர்நோக்கி 32 வருட நீண்ட காத்திருப்பு முற்றுபெறும் தறுவாயில்கூட விடுதலையை ருசிக்க முடியாமல், சிறிது நேரம்கூட விடுதலைக் காற்றை சுவாசிக்க முடியாமல் புழல் சிறையிலிருந்து நானும் ஜெயக்குமாரும், வேலூர் சிறையிலிருந்து சாந்தனும் முருகனும் திருச்சி சிறப்பு முகாமுக்குக் கொண்டுவந்து அடைக்கப்பட்டோம். 'இதோ முடியப்போகுது 32 ஆண்டுக்கால சிறைக் காத்திருப்பு' என்று எண்ணிய எங்களுக்கு அப்பொழுது விளங்கவில்லை நாங்கள் சிறை மாற்றப்படுகிறோம் என்று. ஆம், அன்று நடந்தேறியது அப்பட்டமான சிறை மாறுதல்தான் என்பதை எங்களுக்கு காலம்தான் விளக்கியது. இது சிறையல்ல சிறப்பு முகாம் தானே என்று எண்ணிய எங்களுக்கு இது சிறையல்ல சிறையை விட கொடுஞ்சிறை என்பதும் எங்களுக்குப் போகப்போகத்தான் விளங்கியது.

நாட்டைவிட்டு அனுப்பும்வரை எங்களை சிறப்பு முகாமில் வைக்கிறோம் என்றவர்கள் இன்றைய திகதிவரை நாட்டைவிட்டு அனுப்புவதற்கு எடுத்த முன்னெடுப்புகள் என்னவென்று கேட்டால் மிகப்பெரிய கேள்விக்குறியும் ஆச்சரியக்குறியும் தான் மிஞ்சும். 'சிறப்பு முகாமா..? அது ஜெயில் மாதிரிலாம் இல்லைங்க சார். எல்லா வசதிகளும் செய்து கொடுப்போம்' என்று பேசி சமாளிக்கும் அரசும் நிர்வாகமும் கடந்த ஒரு மாதத்தில் மட்டும் 2 உயிர்களை பலி வாங்கியிருக்கின்றன. கடந்த ஜனவரி 28ஆம் திகதி ஒரு வாரகாலமாக மருந்து மாத்திரை கிடைக்காமல் ஒருவர் இறந்து போனார். இப்பொழுது சாந்தன் கல்லீரல் முழுவதும் செயலிழந்து, எழுந்து நிற்கக்கூட முடியாமல் உடல்நிலை மிக மோசமடைந்து பின்னர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மருத்துவம் ஏதும் பலனளிக்காத நிலையில் இறந்து போயிருக்கிறார். இந்த மரணத்துக்கு யார் பொறுப்பேற்பது..? யாரை நாங்கள் நொந்துகொள்வது..?

**தினம்தினம் வஞ்சிப்பு**

சிறையில்கூட சிறை நிர்வாகத்துக்குச் சிறை விதிகள் கையேடு இருக்கிறது. அதன்படி கைதிகளுக்கு உரிமைகள், கடமைகள் வரையறுக்கப்பட்டு இருக்கும். ஆனால் சிறப்பு முகாமோ சிறையை விட கொடுமையானது, இங்கு எந்தச் சட்டத்திட்டங்களோ வரையறைகளோ கிடையாது. அரசும், மாவட்ட ஆட்சியரும், முகாம்நிர்வாகமும்என்னநினைக்கிறதோ அவையெல்லாம் விதிமுறைகளாகவும் சட்டத்திட்டங்களாகவும் ஆகின்றன. மருத்துவம் கிடையாது என்று இவர்கள் முடிவெடுத்தால் முகாம்வாசிகளுக்கு மருத்துவம் கிடையாது. தனிமைச் சிறை என்று இவர்கள் முடிவெடுத்தால் தனிமைச்சிறை. நாங்கள் சிறுசிறு அடிப்படைத் தேவைகளையும் மற்றும் அடிப்படை உரிமைகளையும்கூட போராடி, உயிரைக் கொடுத்துப் பெறவேண்டிய சூழலே இருக்கிறது.

எங்கள் வாழ்க்கையின் பெரும்பகுதியான 32 வருடங்கள் ராஜீவ்காந்தி பெயரைச் சொல்லியே சிறையில் கடத்தப்பட்டது. இறுதியில் உச்சநீதிமன்றத்தின் விடுதலை ஆணைக்குப் பின்னும் எங்களை, எங்கள் குடும்பங்களோடு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்காமல் காலங்கடத்தி காலங்கடத்தி இறுதியில் சாந்தனை இழந்து நிற்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். மீதமுள்ள நாங்களும் எங்களுக்கான ஒவ்வொரு அடிப்படை உரிமையையும் பெறுவதற்கு இதுவரை எண்ணற்ற மனுக்களையும், வழக்குகளையும், உணவு தவிர்ப்புப் போராட்டங்களையும் மேற்கொண்டே பெற்று வருகின்றோம். அதில் பெரும்பான்மையான வாக்குறுதிகள் காற்றிலேபோகும். மீதி, கேட்கப்படாமலே மக்கிப் போகும்.

உதாரணத்துக்குச் சொல்ல வேண்டுமானால், இந்த மாத தொடக்கத்தில் இலங்கைத் துணைத் தூதரகத்துக்கு அழைத்துச் செல்லவேண்டும் என்று நானும் முருகனும் உண்ணாநிலைப் போராட்டம் மேற்கொண்டபோது ஒரு வாரத்தில் அழைத்துச் செல்கிறோம் என்று எங்களுக்கு வாக்குறுதி கொடுக்கப்பட்டு 20 நாள்களைக் கடந்தும் அது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமல் கிடப்பில் போடப்பட்டிருக்கிறது. இவ்வாறில்லாமல் உரிய அரசுப் பொறிமுறைகள் அவர்கள் கடமையை முறையே செய்திருந்தால் இன்று சாந்தன் உயிருடன் அவருடைய தாயாருடனும் குடும்பத்தினருடனும் மகிழ்ச்சியாக இன்னும் ஓரிரு வருடங்களாவது இருந்திருப்பார்.

முதுமையின் பிடியில், கடைசியாக ஒரு முறையாவது தனது மகனைப் பார்த்து விடவேண்டும் என்று ஏங்கிய ஒரு தாயின் கையில் அந்த மகனின் உயிரற்ற உடலைத்தான் கொண்டுபோய் சேர்க்கப் போகிறோம். கடைசியாக தனது கையால் தன் மகனுக்கு ஒருபிடி உணவு கொடுக்க மாட்டோமா என்று ஏங்கிய அந்தத் தாய்க்கு, தன் மகனுக்கு கடைசியாக வாய்க்கரிசி கொடுக்கத்தான் வாய்த்திருக்கிறது. இதோ இன்று தன் மகன் வந்துவிடுவான், என்று எதிர்பார்த்து காத்திருந்த அந்தத் தாயிடம் 'உன் மகன் வரவில்லை. அவனின் உயிரற்ற உடல்தான் வருகிறது' என்கிற செய்தியை அந்தத் தாயிடம் யாரால் சொல்ல முடியும்? அத்தகைய கல்நெஞ்சம் படைத்த மனிதர்களும் இவ்வுலகில் வாழ்கிறார்களா என்ன?! 33 வருடங்கள் கழித்து தன் மகனின் வருகைக்காக மகிழ்ச்சியாகக் காத்திருந்திருக்கும் அந்த வீட்டில் இந்தச் செய்தி ஏற்படுத்திய மயான அமைதியின் பேரிரைச்சலை தாங்கிக் கொள்ளும் கனத்த இதயம் கொண்ட மனிதர்களும் இவ்வுலகில் இருக்கிறார்களா என்ன?!

**எம் கதியென்ன?**

இதோ கடந்த மாதம் என்னுடன் நடந்து மருத்துவப் பரிசோதனைக்கு வந்த சாந்தன் இன்று எங்களோடு இல்லை. ஒரு மாதத்தில், எங்களோடு உறவாடி, பேசி உலாவிய சாந்தன் இன்று உயிரோடு இல்லை.

மீதமிருக்கிற, ஜெயக்குமாரும் முருகனும் 33 வருடங்களாகத் தங்கள் குடும்பங்களைப் பிரிந்து வாடும் நிலையில் நானோ, மனைவி ஒரு நாட்டில் மகன் ஒரு நாட்டில் தாய், சகோதர சகோதரிகள் வேறு நாட்டில் என சிதறுண்டுக் சிதைந்து கிடக்கும் குடும்பத்தை ஒன்றுசேர்த்து ஒரு நாளேனும் வாழ்ந்துவிடமாட்டோமா?! பச்சிளம் பாலகனாக பார்த்த எனது மகன் எவ்வளவு உயரம் இருப்பான்? அவன் என்னைவிட உயரமா? அல்ல உயரம் குறைவா? அவனுக்குத் திருமணம் ஆகி எனக்கு பேரன் பிறந்திருக்கிறானாம்.! நான் எந்த வயதில் என் மகனைப் பிரிந்தேனோ அந்த வயதில் எனக்கு இப்பொழுது பேரன் இருக்கிறான். அவனதுப்பஞ்சுபாதங்களை அள்ளியெடுத்து ஒருமுறையேனும் என் முத்தங்களைக் காணிக்கையாக்கிவிட மாட்டேனா..?! அன்பார்ந்த உலகத் தமிழ் சமூகமே இன்னும் நாங்கள் மூன்று பேர் மிச்சம் இருக்கிறோம். எங்கள் நிலைமை? நீண்டகால சிறைவாசமும், குடும்பங்களைப் பிரிந்த துயரமும் எங்களை முழுமையான நோயாளிகளாக்கியுள்ளது. சாந்தனைப் போலல்லாமல் எங்களையாவது எங்கள் கடைசிக் காலத்தில் மிஞ்சியிருக்கிற கொஞ்சக் காலம் எங்கள் தாயார், மனைவி, பிள்ளைகள், சகோதர சகோதரிகளுடன் வாழ்ந்துவிட்டுப்போக இந்த அரசு இனியாவது நடவடிக்கை எடுக்குமா..? எங்கள் குடும்பங்களைப் பிரிந்து வாழ்க்கையை இழந்து வாடும் இப்பெருந்துன்பங்கள் முடிவுக்கு வருமா..? - என்றுள்ளது. (அ-ம)

## சாந்தனின்...

அதற்குரிய ஆவணங்கள் அனைத்தும் சென்னைக்கு அனுப்பிவைக்கப்பட்டு உரிய நடைமுறைகள் பூர்த்தியான நிலையில் இன்று வெள்ளிக்கிழமை இலங்கைக்கு சாந்தனின் பூதவுடலைக் கொண்டுவரப்படுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

சிறீலங்கன் எயார்லைன்ஸ் விமானத்தின் மூலமாக மட்டுமே இறந்தவர்களின் சடலங்களை எடுத்துவரும் நடைமுறை காணப்படுவதனால், அந்த விமான சேவை மூலமாக சென்னையிலிருந்து கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்துக்கு சடலம் கொண்டுவரப்பட்டு அங்கிருந்து மலர்சாலையில் உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு பூதவுடல் யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவரப்பட உள்ளது. இறுதிக் கிரியைகள் மற்றும் மக்களின் அஞ்சலிகளுக்கான ஏற்பாடுகள் தொடர்பில் பின்னர் அறியத்தரப்படும் என சாந்தனின் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். (அ-ம-100)

## சாந்தனை....

செல்வதற்கு அனுமதி வழங்குமாறு கோரி உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருந்தார். இந்த வழக்கு நேற்று விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போதே, சாந்தனை இலங்கைக்கு அனுப்புவதற்கு ஜனவரி மாதம் 22ஆம் திகதியே இந்திய மத்திய அரசு முழுமையான அனுமதியை வழங்கி விட்ட விடயம் மத்திய அரசின் சட்டத்தரணியால் சுட்டிக்காட்டப்பட்டது.

'மத்திய அரசு ஜனவரி மாதம் 22ஆம் திகதி இலங்கைக்குச் சாந்தன் செல்வதற்கு முழுமையான அனுமதி வழங்கி விட்டது என்றால், எதற்காக அவரை அனுப்பிவைக்கவில்லை?' என்று தமிழக அரசின் சட்டத்தரணியிடம் நீதிபதிகள் வினவினர். அதற்கு 'ஜனவரி 24ஆம் திகதிமுதல் சாந்தன் உடல்நலக்குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அவரால் நடக்கக்கூட முடியவில்லை என்பதாலேயே இலங்கைக்கு அனுப்ப முடியவில்லை' என்று சட்டத்தரணி பதில் வழங்கினார்.

இதையடுத்து சாந்தனின் சடலத்தை இலங்கைக்கு அனுப்ப உரிய நடவடிக்கைகளை விரைந்து எடுக்க வேண்டும் என்றும், இறப்புச் சான்றிதழ் அவருக்கு வழங்கப்படவேண்டும் எனவும் நீதிமன்ற உத்தரவுகள் நிறைவேற்றப்பட்டமை தொடர்பான அறிக்கையை மார்ச் மாதம் 4ஆம் திகதி தாக்கல் செய்யவேண்டும் என்றும் நீதிமன்றம் கட்டளையிட்டது.

சாந்தனின் உடல்நிலையில் எந்த முன்னேற்றமும் இல்லாத நிலையில், அவரை 'அம்புலன்ஸ் விமானத்தில்' அனுப்பிவைக்கவே தமிழக அரசு இறுதியாக நடவடிக்கை எடுத்திருந்தது. அந்த நடவடிக்கையை முன்னரேயே எடுத்திருந்தால் அவர் தன் தாயாருடன் ஒரு மாதமாவது உயிரு டன் இருந்திருப்பார் என்று பலரும் கருத்துத் தெரிவித்துள்ளனர். (அ-ம-26)

## ரயிலில்...

முல்லைத்தீவு மாவட்டம், மாங்குளம் பகுதியில் ரயிலுடன் மோதுண்டு வயோதிபப் பெண்ணொருவர் நேற்று உயிரிழந்தார்.

சடலம் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் பாரப்படுத்தப்பட்டது. இறந்தவர் யார் என்பது தொடர்பான அடையாளப்படுத்தல்கள் நேற்றுமாலை வரை மேற்கொள்ளப்படவில்லை. மேலதிக விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ-ம-19)

## 53,000...

சட்டவிரோதப் பொருள்கள் நாட்டுக்குள் கடத்தப்படுவதைத் தடுக்கும் விதமாக மேற்கொள்ளப்பட்ட சிறப்பு நடவடிக்கையின்போதே இந்தப் போதைமாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளன. இந்த விடயம் இலுப்பைக்கடவை பொலிஸ் விசேட அதிரடிப் படையினரிடம் பாரப்படுத்தப்பட்டதையடுத்து, அவர்கள் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-ம-246)

## சுமந்திரனின்...

நீதிபதிகளாலேயே இந்த மனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

உயர்நீதிமன்றம் முன்வைத்த திருத்தங்கள் இதில் இடம்பெறாத காரணத்தினால் சட்டபூர்வமாக குறித்த சட்டம் நிறைவேற்றப்படவில்லை எனத் தீர்ப்பு வழங்குமாறு கோரி நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான சுமந்திரன் இந்த மனுவை சமர்ப்பித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## தரிப்பிடச்...

ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், தனியார் பேருந்துச் சங்கங்களின் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் இந்தக் கலந்துரையாடலில் ஈடுபட்டனர். இதன்போதே, நெடுந்தூரப் பயணத்தில் ஈடுபடும் தனியார் பேருந்துகளின் தரிப்பிடப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக தனிக் குழு அமைப்பது என்று முடிவெடுக்கப்பட்டது. அத்துடன், அதுவரை புதிய பேருந்து நிலையத்தில் இருந்து இ.போ.ச.வினரும், தனியார் பேருந்துகளும் சேவையில் ஈடுபடுவது தொடர்பில் பரிசீலிப்பது என்றும் கொள்கையளவில் உடன்படப்பட்டது. (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திலீபனை அஞ்சலித்தமை: வழக்கில் சிவாஜி விடுவிப்பு



யாழ்ப்பாணம், மார்ச் 1

திலீபனின் நினைவேந்தலைக் கடைப்பிடித்தமை தொடர்பாகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கிலிருந்து நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் விடுவிக்கப்பட்டுள்ளார்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கு, கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்றையதினம் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. சிவாஜிலிங்கத்தின் சார்பாக முன்னிலையான சட்டத்தரணி கே.எஸ்.ரட்ணவேல், சிவாஜிலிங்கத்துக்கு எதிரான குற்றச்சாட்டுகள் அரசமைப்புக்கும் பயங்கரவாதத் தடைச்சட்ட விதிகளுக்கும் முரணானது என்றவாறாகத் தனது சமர்ப்பணங்களைமுன் வைத்திருந்தார்.

அவற்றைஆராய்ந்த நீதிமன்றம் சிவாஜிலிங்கத்தை விடுவித்து உத்தரவிட்டது. (ம-26)


## விற்பனைக்கு

Restaurant ஒன்றிற்குத் தேவையான தளபாடங்கள்/ உபகரணங்கள் விற்பனைக்கு உண்டு.

- Large Upright Chillers
- Food Chiller
- Salad Dispenser
- Large Fridges
- Bottle Cooler
- Deep Fryer
- Cookers
- Table
- Grinder
- Deep Freezers
- Large Gas Cylinder
- Burger Plate with Cooker

தொடர்பு எண்: 077 653 3221

(CS 54124) S-1

## புத்தகசாலை ஒன்றிற்கான வேலைவாய்ப்பு

யாழ். நகரில் அமைந்துள்ள ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் எனும் புத்தக சாலைக்கான வேலைவாய்ப்பு.

ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்பு:077 4949 683
077 077 6469

(CS 29397) A-1

## காணி விற்பனைக்கு

இராசபாதை வீதியில் வீட்டுடன் கூடிய 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 077 986 5457


## மரண அறிவித்தல்



**கந்தையா விக்கினேஸ்வரன்**

சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா விக்கினேஸ்வரன் அவர்கள் நேற்று (29.02.2024) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - சுந்தரவல்லி தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சித்தராங்கதேவியின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.03.2024) வெள்ளிக்கிழமை பிற்பகல் 03.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இரட்டையப்புலம் வைரகோயிலடி,
சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய். (CS 28051) S-1

தகவல்:
குடும்பத்தினர்.
077 311 6973

## தசாக கிருஹயக்ஞ அழைப்பு



நிகழும் சுபகிருது வருடம் மாசி மாதம் 10 ஆம் நாள் (22.02. 2024) வியாழக்கிழமை பூர்வபட்ஷ திரயோதசி திதியில் சிவபதமடைந்த கல்வயலை பிறப்பிடமாகவும் கொட்டகலை, நுவரெலியாவை வதிவிடமாகவும் தற்போது சரசாலையில் வசித்து வந்தவருமான எமது குடும்பத் தலைவர்

### சுப்பிரமணிய ஐயர் இரகுநாதஐயர்

**அவர்களின் ஆத்ம சாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்**

- 02.03.2024 - சனிக்கிழமை - தசாகம் (காலை 8.30 மணி)
- 03.03.2024 - ஞாயிற்றுக்கிழமை - ஏகோதிட்டம், மாசியம் (காலை 10 மணி)
- 04.03.2024 - திங்கட்கிழமை - சபிண்டீகரணம் (பகல் 10 மணி)
- 05.03.2024 - செவ்வாய்க்கிழமை - கிருகயக்ஞம் (மதியபோசனம்) பகல் 12 மணி

மேற்படி கிரியைகளில் தாங்களும் பங்குபற்றி அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் 05.03.2024 செவ்வாய்க்கிழமை அன்று நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**(இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்கவும்)**

நுணுவில் பிள்ளையார் கோவில் வீதி,
சரசாலை வடக்கு, சாவகச்சேரி.
தொ.இல :- 077-931 9271

ஸ்ரீதரன் (மகன்),
குடும்பத்தினர்.

(CS/54176) J-1

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம் 31 . 12 . 1942

மறைவு 01 . 02 . 2024



### அமரர் வள்ளிநாயகி கந்தசாமித்துரை
(கிண்ணியம்மா)

கடந்த 01.02.2024 அன்று இறைபதமடைந்த எமது குடும்ப விளக்கு வள்ளிநாயகி கந்தசாமித்துரை (கிண்ணியம்மா) அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 02.03.2024 நாளை சனிக்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் வல்வெட்டித்துறை ஊறணி தீர்த்தக்கரையில் இடம்பெறும். அதனைத்தொடர்ந்து அன்னாரது இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.

வேம்படி,
உடையார் மணல் வீதி,
வல்வெட்டித்துறை. (CS/26596) J-1

குடும்பத்தினர்
அருமை (மகன்) - 077 841 4450
ஈசன் (மகன்) - 071 321 6996

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும், நன்றி நவிலலும்

தோற்றம் 30 . 10 . 1954

மறைவு 01 . 02 . 2024



### நாகேஸ்வரி தர்மலிங்கம் (பச்சைமணி)

கடந்த 01.02.2024 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்ப குலவிளக்கின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (29.02.2024) வியாழக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. நாளை 02.03.2024 சனிக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இடம்பெறும். அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத்தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

மேலும் அன்னாரின் மறைவுச் செய்தியறிந்து பல வழிகளிலும் உதவி புரிந்த அன்பு நெஞ்சங்களுக்கும், தொலைபேசி ஊடாகவும், சமூகவலைத் தளங்களினூடாகவும், இரங்கல் தெரிவித்த அன்பு உறவுகளுக்கும், பதாகைகள் வெளியிட்டவர்களுக்கும், மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியவர் களுக்கும், வீட்டிற்கு வருகை தந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், யாழ். போதனா வைத்திய சாலை மருத்துவர்கள், தாதியர்கள், ஊழியர்கள், மற்றும் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

குடும்பத்தினர்.

உடையார் வீதி,
ஊரெழு கிழக்கு, சுன்னாகம். (CS/54176) J-1

021-224 1906
074-345 5498



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.03. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.